# The Wedding of Valli

— IN TAMIL —

BY

Rao Bahadur P. SAMBANDAM, B. A., B. L.

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, Mixture, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, Talkie Experiences etc. in Tamil; and Harischandra, and Yayathi in English.

SECOND EDITION

**MADRAS.**

PRINTED BY THE PEERLESS PRESS.

15, LINGHI CHETTY STREET, G. T.

1940

*All rights reserved.*] [ *Price* [redacted] 2.00

உ

# வள்ளி மணம்

இந்த தமிழ் நாடகம்

ராவ் பஹதூர்

**ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.,**

அவர்களால் இயற்றப்பட்டது.

**இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :**

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம், நான்காம் பாகம், ஐந்தாம் பாகம், ஆறாம் பாகம், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுரவணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்ல தங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், கதம்பம், முதலியன.

இரண்டாம் பதிப்பு

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

2.00

காபிரைட்] 1940 [விலை [redacted]

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

# வள்ளி மணம்

## நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| சுப்பிரமணியர் .... | .... கழுகாசலக் கடவுள் |
| நாரதர் .... | .... தேவ ரிஷி |
| நம்பிராஜன் .... | .... வேடுவ அரசன் |
| வள்ளி .... | .... நம்பிராஜனுடைய வளர்ப்புப் பெண் |

நம்பிராஜனுடைய ஏழு மைந்தர்கள், கோயில் குருக்கள், நம்பிராஜன் மந்திரி, வள்ளியின் தோழி, வேடர்கள், வீரபாஹு—தேவர், யானை உருக்கொண்ட கணநாதர், முதலியோர்.

கதை நிகழ் இடம் :—கழுகுமலைப் பிரதேசம்.

உ

# வள்ளி மணம்

## முற் கூறு

### தோற்றக் காட்சி

இடம்—சிற்றூரில் நம்பிராஜன் மனையில் வள்ளியின் பள்ளியறை.

வள்ளி மஞ்சத்தின் மீது படுத்துறங்குகிறாள். திடீரென்று அறையின் பின்பக்கத்துச் சுவற்றில் ஓர் ஜோதியின் மத்தியில் சுப்பிரமணியர் தோற்றுகிறார். சிறிது பொழுதில் சுப்பிரமணியர் மறைய, ஜோதியும் மறைகிறது.

## முதல் அங்கம்

### முதல் காட்சி

இடம்—மலைச்சாரல். காலம்—காலை.

ஓர் ஆலமரத்தடியில் நம்பிராஜன், மந்திரி, நம்பிராஜனுடைய ஏழுமைந்தர்கள், வீற்றிருக்கின்றனர். சில வேடர்கள் புடை சூழ்ந்திருக்கின்றனர்.

ம. ஆகவே அரசே, வள்ளியின் மணத்தைச் சீக்கிரம் முடித்தல் நலமெனத் தோற்றுகிற தெனக்கு.

ந. [சற்று யோசித்து] ஆம் மந்திரி, நீ கூறுவது நியாயம் தான். எத்தனை நாள் நம்முடைய வீட்டில் இருந்தபோதிலும் ஒரு நாள் தன் கணவன் வீடுபோய்ச் சேரவேண்டியவள் தானே! இப்பிரிவை நினைத்தே இதுவரையில் இவ் விஷயத்தைப்பற்றி நீங்கள் பன்முறை கூறிவந்தபோதிலும், நீங்கள் கூறுவது நியாயமென வறிந்தும், அதற்குச் செவியினைக் கொடாது வந்தேன். என்ன ஆச்சர்யம்! என் வயிற்றிற் பிறந்த மகளா யில்லாவிட்டாலும், தெய்வாதீனத்

தால் வள்ளிக் கொடியின் மத்தியிற் கிடைத்த குழவியா யிருந்தபோதிலும், அஷ்ட தரித்திரனுக்கு கிடைத்த அரும் பெரும் நிதியைப்போல் நான் ஆதரவுடன் வளர்த்து வந்தமையால், அவளை விட்டு அரைக் கணம் பிரிவதென்றாலும் என் மனம் தத்தளிக்கிறது !

கடைசி மைந்தன். ஆமாண்ணா! எனக்குக்கூட வருத்தமாயிருக்குது. கலியாணம் பண்ணிக்கொடுத்தாதானெ கஷ்டம், கலியாணம் பண்ணிக் கொடுக்காதெபோனா, நம்ப ஊட்டிலேயே இருக்கும் தங்கிச்சி.

ந. என்ன புத்தியில்லாதவனா யிருக்கிறாய்! எத்தனைநாள் நம்முடைய வீட்டிலிருந்தபோதிலும் ஒரு நாள் புருஷன் வீடு போகவேண்டியவள்தானே! அதுவும் வயதாகிவிட்டது. இனி தனித்திருக்கலாகாது.

க. மை. ஏ! எங்களுக் கெல்லாம் வயசாகலேயோ! நாங்கல்லாம் தனியா யிருக்கலேயோ?

ந. என்னடா அது? ஒன்றும் தெரியாதவன்போல் உளறுகிறாய். அவள் புத்தி யறிந்தவளாய் விட்டாள் என்று சொன்னேன்.

க. மை. என்னண்ணா! நீங்க இப்படி பேசுரைங்க? கொஞ்ச முன்னே எனக்கே புத்தியில்லே இண்ணு சொன்னீங்களே! எனக்கானா சின்னதங்கிச்சிக்கி மாத்ரம் புத்திவந்துட்டுதோ?

முதல் மைந்தன். என்ன அண்ணா அந்த மடையனுடன் பேச்சு?

க. மை. ஏ! நீயும் அவங்களோடே சேந்தையோ? என்னண்ணாலும் எனக்கு நீ அண்ணாத்தே. நீ சொல்ரத்தை யெல்லாம் ஒப்புக்கொ வேண்டியதுதான்.

மு. மை. அண்ணா, வள்ளியின் மணத்தைப்பற்றி நீங்கள் தீர்மானிக்கிற வரைக்கும் நானாக இதைப்பற்றி பேச இஷ்டமில்லாதிருந்தேன். அடுத்த மலை நாட்டரசன் இளங்கிள்ளி தனக்கு வள்ளியை மணம் செய்து கொடுக்கும்படி சில நாளாக மன்றாடி வருகிறான் என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

இ. மை. அண்ணு, தேக்குமலே அரசன் தனக்கு மணம்புரிய விருப்பமிருப்பதாக என்னிடம் தெரிவித்திருக்கிருன்.

மூ.மை. நம்முடைய அத்தை மகன் ஒரு வருஷகாலமாக மன்ருடி வருகிருன் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

க. மை. எல்லாருந்தாம் கேக்கராங்க! கேக்கரவங்களுக் கெல்லாம் கல்யாணம் பண்ணி கொடுத்தூடரதோ? அண்ணு, தங்கிச்சியே கல்யாணமே பண்ணிக்கொடுக்காதைங்க, நம்ப கிட்டவே யிருக்கட்டும்.

ந. மைந்தர்காள், இவ் விஷயங்களெல்லாம் நான் அறியாதவனன்றே. ஆயினும் விவாகம் செய்து கொடுத்தால் நமது செல்வத்தை விட்டுப் பிரியவேண்டி வருமே என்னும் வருத்தம் ஒருபுறம் இருக்க, நமது ஜாதியிற் பிறந்த எவனும் நமது குழந்தையின் அழகிற்கும் அருங் குணத்திற்கும் ஏற்ற கணவனுக மாட்டானே, என்னும் கஷ்டம் என்னே அதிகமாய்ப் பிடித்து வருகிறது, எனக்கு வேறு யோசனே ஒன்றும் தோன்றவில்லே. நமது குல தெய்வத்தின் கோயிலுக்குச் சென்று பூசனே இயற்றி குறி கேட்கலாமென் றிருக்கிறேன்.

ஒரு வேடன் வருகிருன்.

வே. மஹாராசா! நம்போ கோவுல் குருக்கள் வந்திருக்கிருரு.

ந. நல்ல சமயத்தில் வந்தார். உடனே வரச் சொல். [வேடன் சென்று குருக்களே அழைத்து வருகிருன்.] வாருமையா குருக்களே.

கு. [ஆசீர்வாதம் செய்து தேங்காய், பழம், புஷ்பம், விபூதி கொடுத்து] சுப்பிரமணிய ஸ்வாமிப் பிரஸாதப் பிராப்திரஸ்து!

[நம்பிராஜனும் பிள்ளேகளும் விபூதியை வாங்கி அணிகின்றனர்.]

க. மை. ஐயா, குருக்களே, என்ன இண்ணேக்கி பிரசாதத்தைக் காணேம்.

ந. அடே அதனப் பிரசங்கி, கொடுத்தது பிரசாத மல்லவோ?

க. மை. இதென்னப் பிரசாதம் அண்ணு, நெத்தியிலே பூசிகிறது—சாப்பிடர பிரசாதம்தானே முக்கியம்; அது யேன் இண்ணைக்கு வர்லே ?

ந. அவன் கிடக்கிருன். குருக்களே, ஸ்வாமினுடைய பூஜையெல்லாம் சரியாக நடந்து வருகிறதா ?

கு. அதைப்பற்றி இங்கே தெரிவித்துக் கொள்ளதான் வந்தேன். கொஞ்ச காலமாக ஸ்வாமிக்கு நைவேத்யம் இல்லாம லிருக்கிறது. கோயில் மான்யமாக விடப்பட்ட புனத்திலிருந்து வருஷா வருஷம் வழக்கப்படி வருவதுபோல் இவ்வருஷம் தினை என்ன காரணத்தினுலேயோ இன்னும் வராமலிருக்கிறது.

க. மை. அதாம் நம்பளுக்கு இண்ணைக்கு பிரசாதம் வர்லே.

கு. தம்பி சொல்வது உண்மைதான்.

ந. ஆம் ஆம், நானும் கேள்விப்பட்டேன். மந்திரி, அந்தபுனத்திலிருந்து ஏன் இன்னும் சாகுபடி ஆகவில்லை யென்று உன்னை விசாரிக்கச் சொன்னேனே ?

ம. அரசே, நான் அப்பொழுதே போய் விசாரித்துப் பார்த்தேன். இது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. மற்றப் புனங்களிலுள்ள தினையெல்லாம் அறுவடையாகியும் இப்புனத்தில் மாத்திரம் கதிர்கள் முதிராமலிருக்கின்றன ; அப்படி யேதாவது சில கதிர்கள் முதிர்ந்த போதிலும் அவற்றைக் கூட்டம் கூட்டமாகப் பட்சிகள் வந்து கொரித்துவிடுகின்றன. என்ன காவல் போட்டும் பயன் படவில்லை. காவலிருப்பவர்களுக் கெல்லாம் தெய்வீகமாய் ஏதாவது விபத்து நேரிடுகிறது. மூன்ரும் நாள், காவல் செய்வதில் கைதேர்ந்த நமது காடனை அனுப்பினேன் காலையில், சாயங்காலம் போய்ப் பார்த்தால் மூர்ச்சையாகி விழுந்து கிடந்தான்.

க. மை. நானு கூடப் போயி பார்த்தென் அண்ணு.

மு. மை. இவன் காவல் காத்த அழகைச் சொல்கிறேன். சாயங்காலம் போய்ப் பார்த்தால் இருந்த இடத்திலேயே உறங்கிக்கொண்டிருந்தான். இவன் தலையில் ஒரு பட்சி கூண்டு கட்டிக்

கொண்டிருந்தது. அதுகூட தெரியாமல் உறங்கிக்கொண்டிருந்தான்.

க. மை. இல்ல அண்ணு, போனதும் எனக்கு ஓரே மயக்கமா வந்தது அண்ணு.

ம. நேற்றைத் தினம் நமது படை வீரனுகிய நாணனை அனுப்பினேன். அவன் பரண்மீதேறியதும் அகஸ்மாத்தாய் கண்பொட்டையாய் விட்டதாகக் கேள்விப் பட்டேன்!

கு. ஆம், மஹாராஜா. அது உண்மைதான், அவன் நேற்றிரவு ஸ்வாமிக்கு நெய் காவடி எடுத்து பூஜைபோட்டான். அப்பொழுது அவன்மீது ஆவேசம் வர, நாங்கள் இந்த விபத்துக்கெல்லாம் காரணம் என்னவென்று வினவினேம்; அப்பொழுது:—

ந. என்ன குருக்களே, ஏன் மயங்குகிறீர்—என்ன உத்தரவாச்சு சொல்லும்.

கு. உங்கள் மகாராஜா தன் குலாசாரப்படி நடவாததுதான் இதற்கெல்லாம் காரணம் என்று உத்தரவாச்சுது.

ந. அப்படியா ? ஆண்டவன் அப்படியா உத்தரவு பண்ணினுர்? என்ன நான் எனது குலாசாரப்படி நடவாமற் போனது ? மந்திரி, எனக் கொன்றும் தோன்றவில்லை. ஆண்டவன் வார்த்தையில் அணுவளவும் பொய்யிராதே. மந்திரி, இதை விடுவிக்க உன்னுலாகுமா ?

ம. உத்தரவானுல் எனக்குத் தோற்றுவதைத் தெரிவிக்கிறேன்.

ந. ஒன்றும் அஞ்சாது தாராளமாய்ச் சொல்லும்.

ம. நடந்திருக்கும் எல்லா விஷயங்களையும் ஒருங்கே சேர்த்துப் பார்க்குமிடத்து எனக்கு ஒன்றுதான் படுகிறது புத்தியில். வேடுவர்களாகிய நமது குலாசாரம் என்னவென்ருல், ஒரு கன்னிகை வீட்டிலிருந்தால் அவளுக்குத் தக்க பருவம் வந்ததும் தினைப்புனத்தைக் காவல் செய்ய அனுப்பவேண்டுமென்பது—தாங்கள் அவ்வாறு இதுவரையில் செய்யாதது தான் தவறென்று நினைக்கிறேன்.

ந. அடடா! மந்திரி, நீ கூறுவது மெய்தான். இதுவரையில் இதை மறந்திருந்தேன், நன்றாய் ஞாபகப்படுத்தினீர்.

க. மை. அண்ணா, எனக்குக் கூட ஞாபகம் வந்தது இப்போ. நம்ப தங்கிச்சி தினைப் புனத்தைப்பற்றி கேட்கச் சொல்லுச்சி, இதோ பாருங்க. ஞாபகத்துக்காக குட்டையிலே கூட முடி போட்டு வைச்சிருக்கிறேன்.

ந. என்ன கேட்கச் சொன்னாள் வள்ளி?

க. மை. அத்தெ தான் மறந்து பூட்டேன் அண்ணா!

ந. நிரம்ப புத்திசாலி நீ!—போய் வள்ளியை இங்கு அழைத்து வா.

க. மை. இதோ. [போகிறான்.]

ந. ஆயினும் நமது அருங் குழந்தையை புனத்தின் காவலாக அமைப்பதென்றால் நெஞ்சம் அஞ்சுகிறது.

ம. அரசே, ஆறுமுகக் கடவுளின் அருள் நமக்கிருக்கும் பொழுது நமது அருமைப் புதல்விக்கு என்ன அபாயம் நேரிடப்போகிறது?

கடைசி மைந்தன், வள்ளி, தோழி வருகிறார்கள்.

க. மை. இதோ அழைச்சிகினு வந்தூட்டேண்ணா.

வ. அப்பா, நமஸ்காரம்.

ந. வாராய் குழந்தாய்.

வ. என்னை அழைத்தீர்களாமே அப்பா, என்ன விசேஷம்?

ந. குழந்தாய், வேறொன்றும் விசேஷமில்லை. வேடுவர்களாகிய நமக்குள் ஒரு குலாசாரம் உண்டு. அதாவது பெண்களுக்கு வயது வந்தவுடன் தினைப்புனங்களைக் காவல்செய்ய அனுப்பி வைக்கவேண்டுமென்பதே. நான் இது வரையில் அதன்படி நடவாதது தவறாகும். நமது குல தெய்வத்தின் உத்தரவும் அப்படியே ஆயிருக்கிறது. ஆகவே, கண்மணி, உன்னை நமது குலதெய்வத்தின் மான்யமான தினைப்புனத்தைக் காவல் செய்ய நியமிக்கலாமென்று உத்தேசித்திருக்கிறேன், உன் இஷ்டம் எப்படியோ?

வ. அண்ணு, உங்கள் உத்தரவிற்குக் குறுக்குண்டோ? என் இஷ்டத்தைக் கேட்பானேன்? ஆயினும் இதில் ஒரு சந் தோஷம், சில தினங்களாக எந்நேரமும் வீட்டி லடைபட் டிருக்கிறோமே, நம்முடைய ஜாதியிற் பிறந்த மற்றப் பெண் களைப்போல நாமும் காட்டில் புனங்களுக்குக் காவலிருந்து அங்கிருக்கும் காட்சிகளை யெல்லாம் கண்டு மகிழலாகாதா என்று இச்சையுண்டாக, நானுக உங்களுடைய அனுமதி யைப் பெறவேண்டுமென்று சொல்லி யனுப்பினேனே, கேட்க வில்லையா யாரும் இதுவரையில்?

க. மை. ஆமாண்ணு! இப்போ ஞாபகம் வந்துது. இத்தெதான் கேக்கச் சொல்லிச்சி தங்கிச்சி!

ந. நிரம்ப கெட்டிக்காரன்தான்! இப்பொழுதாவது ஞாபகம் வந்ததே உனக்கு. குழந்தாய் வள்ளி, மிகவும் சந்தோஷம். இவ்விஷயத்தில் உனக்கும் விருப்ப மிருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது—குருக்களே, சீக்கிரம் நல்ல நாளாய்ப் பாருங்கள், குழந்தையை தினைப்புனம் அனுப்ப.

கு. நாளைத்தினம் காலை நான்ருயிருக்கிறது.

ந. சரி, வள்ளி, நாளை காலை புறப்படுவாய்.

க. மை. ஏ! தங்கிச்சியெ தனியாகவா அனுப்பரது? நாம்பல்லாம் தொணையா போவத்தேவலேயோ?—அப்பறம் அண்ணைக்கு ஒரு காட்டானையெ பாத்து பயந்துதே, அந்தமாதிரி பயந்தா.

வ. சின்னகுட்டியண்ணு! சின்னகுட்டியண்ணு! அதை ஞாபகப் படுத்தாதே! எனக்கு பயமா யிருக்கிறது!

ந. குழந்தாய், நீ ஒன்றும் பயப்படாதே அம்மா, உனக்குத் துணையாக உன் தோழியை அழைத்துச்செல். அன்றியும் நாங்களெல்லோரும் தினம் வந்து பார்த்து வருவோம்.

வ. சந்தோஷம் அண்ணு.

க.மை. அதெல்லாம் கூடாது, நானும்கூட காவலா போரேன்.

மு.மை. அங்கே போய் தூங்குவதற்கா?

வ. இல்லை அப்பா, சின்னகுட்டி அண்ணாவையுங்கூட அனுப்புங்கள் வேடிக்கையாய்ப் பொழுதுபோக்க.

ந. சரி, அவனையும் அழைத்துச்செல். அவன் இங்கிருந்து என்ன செய்யப் போகிறான்.

மூ.மை. அடே தம்பி, போகும்போது தலையை மொட்டை அடித்துக்கொண்டு போ, இல்லாவிட்டால் குருவி கூண்டு கட்டு மதில்.

வ. அண்ணா, நான் உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

ந. போய்வா, அம்மா. [வள்ளி தோழியுடன் போகிறாள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாங் காட்சி

இடம்—ஓர் தினைப்புனம். காலம்—பகல்

பின்பக்கத்தில் ஓர் பரண் கட்டியிருக்கிறது. வள்ளி வருகிறாள்.

வ. ஹா! என்ன ஆச்சர்யம்! இங்கு வரும் பட்சிகளெல்லாம் கதிர்களைக் கொரிப்பதில்லையே நான் வந்தபிறகு! ஒன்றோடொன்று கொஞ்சிப் பேசி விளையாடிப் போகின்றனவேயொழிய, பயிரை யழிப்பதைக் காணோம்.—முருகா! இதுவும் உமது விளையாட்டோ! இப்படி என் மனதை வாட்ட வேண்டுமென்று எண்ணங் கொண்டீரோ! இவைகளை யெல்லாம் பார்க்கும்பொழுது என் காதல் அதிகரித்து உம்முடன் நான் எப்பொழுது இவ்வாறு சந்தோஷப்படுவது என்னும் எண்ணமுண்டாகி வெந்துயரில் ஆழ்கிறேனே! காதலா! உமது கல்நெஞ்சம் எப்பொழுதுதான் இரங்குமோ?

பின்புறமாக தோழி வருகிறாள்.

தோ. அம்மா! இனி என்னிடமிருந்து ஒளிப்பதிற் பயனில்லை! நான் சில தினங்களாக இப்படித்தா னிருக்கவேண்டுமென்று சந்தேகித்தேன்!

வ. தோழி!—நான் ஏதோ வேடிக்கையாய்க் கூறியதைக் கேட்டுக்கொண் டிருந்தாயா என்ன?

தோ. இந்தக் கதையெல்லாம் இனி என்னிடம் உதவாது. இதில் வேடிக்கை யொன்றுமில்லை. நீர் உண்மையில் யாரோ ஒரு புருஷன்மீது காதல்கொண்டு அதன் பொருட்டு வருந்து கிறீர் என்று நன்கு யறிந்துகொண்டேன். உண்மையை உரையும் என்னிடம். யார்மீது அம்மா, காதல்கொண் டிருக்கிறீர்? என்னிடம் கூறலாகாதா?

வ. உன்னிடம் கூறி என்ன பயன்?

தோ. சொல்லித்தான் பாருமே.

வ. அப்புறம் என்னை ஏளனஞ் செய்வாய்.

தோ. இல்லை.

வ. சத்தியமாக?

தோ. சத்தியமாக—நான் ஏன் உம்மை ஏளனம் செய்யவேண் டும்?—சொல்லும்.

வ. உம்—உம்—எனக்கு வெட்கமா யிருக்கிறதடி.

தோ. வெட்கம் என்ன? சொல்லும்—நானும் உம்மைப்போல் ஸ்திரீ ஜாதிதானே.

வ. என் காதலன்—காதலன்—

தோ. யார்? ரகசியமாய் என் காதில் சொல்லும்—

வ. [அவள் காதருகில்] கழுகாசலபதி!

தோ. யார்? யார்?

வ. நமது குல தெய்வமாகிய முருகவேள்!

தோ. அம்மா! உமக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா என்ன!

வ. என் ஆருயிர்த் தோழியாகிய உன்னிடம் உண்மையை உரைக்கிறேன். அன்றைத்தினம் கனவில் கண்டதாகக் கூறினேனே, அது முதல் அவரது அழகிய உருவம் அரைக் கணமும் என் மனதினைவிட் டகலேனென்கிறது! அடி தோழி, நான் மணம் புரிவதானால் அவரையே மணம் புரி வேன்; இல்லாவிடில் கன்னியாகவே என் வாழ் நாட்களைக் கழிப்பேன், இது சத்தியம்.

தோ. அம்மா! உங்களுக்குப் பயித்தியம்தான் பிடித்திருக்கிற தென்று நினைக்கிறேன்—என்னடி யம்மா இது, நம்முடைய குலத்தி லுதித்த வேடராஜ குமாரர்களை யெல்லாம் வெறுக்கிறார்களே, என்று பார்த்தேன்; இப்பொழுது தெரிகிறது காரணம்.—இந்தப் பயித்தியம் இருக்கும் வரையில்—

வ. தோழி! தோழி! அதோ சின்னகுட்டி யண்ணு வருகிறார்—அவரிடம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லாதே.

கடைசி மைந்தன் வருகிறான்.

வ. சின்னகுட்டி அண்ணு, அந்த வேடன் போய்விட்டானு ?

க. மை. ஒரே ஓட்டம் பிடிச்சான் அவன்! இந்த தடியெ காம்பிச்சி அதுலெ என்னு எழுதியிருக்குது பார் இண்ணே—புடிச்சாம் ஒரு ஓட்டம்! இனிமேலெக்கி இங்கெ கிட்ட நெருங்கமாட்டாம்போ தங்கிச்சி.

வ. அது என்ன அண்ணு அதில் புதிதாய் என்னவோ எழுதியிருக்கிறீர்களே ?

க. மை. [படித்து] "ஒரே அடியில் ஏழு" தெரியுமா? இது என்கையிலெ இருக்கரவரைக்கும் உனக்கு பயமே வேணும்போ.

தோ. அது என்ன ஐயா அது? ஏழு பெயரையா ஒரு அடியில் கொன்று விட்டீர்கள்? எப்பொழுது ஐயா அது?

க. மை. ஏ! தோழி, நீ சும்மா இரு. இந்த அதனப்பிரசங்கி கேழ்விங்கள்ளா கேக்காதெ! இது ஒரு ரவுசியம்! யாருக்கும் சொல்லமாட்டேன்.

வ. சின்னகுட்டி அண்ணு, எனக்குக்கூட சொல்லமாட்டீர்களா?

க. மை. அது ஒரு பெரிய ரவுசியம்! யாருக்கும் சொல்லமாட்டேன்.

வ. உங்கள் இஷ்டம். வா தோழி, நாம் பரணுக்குப் போவோம். நாம் இங்கு வந்து பேசிக்கொண்டிருப்பதற்குள் பட்சிகள் வந்து இரங்க ஆரம்பித்தன பார். இதென்ன தர்ம சங்கடமாய்ப் போச்சுது! ஒருபுறம் பட்சிகளைத் துரத்தவேண்டியிருக்கிறது, மற்றொருபுறம் என்னைக் கலியாணம் செய்து

கொள்ளவேண்டுமென்று வரும் இந்த வேடர்களைத் துரத்த வேண்டி யிருக்கிறதே.

க. மை. தங்கிச்சி, இந்த வேடப் பசங்களுக்காவ நீ இனிமேலெ பயப்படாதே ; எங் கையிலெ இந்த "ஒரே அடியில் எழு!" இருக்கரவரைக்கும் இனிமேலெ ஒருத்தனும் கிட்ட வர மாட்டான்.

வ. மிகவும் சந்தோஷம். அப்படித்தான் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிரு அண்ணா. இந்த தினைப்புனத்திற்குள் ஒரு ஆண் பிள்ளையையும் விடாதே.

க. மை. எவனானா ஆம்பளெ கிட்ட நெருங்கட்டும்! ஒரே அடியில் எழு!

வ. அதுவும் எவனாவது என் கலியாணத்தைப்பற்றி பேச்செடுத்தால்—

க. மை. காலெ அப்படியெ ஒடச்சூடமாட்டேனா! "ஒரே அடியில் எழு!" நீ பயப்படாதெ இனிமேலெ, போ பரணுக்கு தங்கிச்சி. [வள்ளியும் தோழியும் பரணுக்குப் போகிறார்கள். வள்ளி பரண்மீதேறி ஆலோலம்பாடி பட்சிகளை ஓட்டுகிறாள்.]

ஒரு புறமாக நாரதர் வருகிறார்.

நா. ஆஹா! குறவர்கள் வாழும் இக் காட்டில் இவ்வளவு இனிய குரலுடன் பாடும் பாவையாரோ? தெய்வலோகத்து அப்சர ஸ்திரீகளும் இவ்வளவு அழகாயும் ரசமாகவும் பாடியதைக் கேட்டதில்லை நான். கேவலம் ஒரு குறப்பெண்ணுக்கு இவ்வளவு முதிர்ந்த சங்கீதப் பயிற்சியும் இனிய குரலும் எங்கே கிடைத்தது?

[பரணை நோக்கி வள்ளியைப் பார்த்து.]

ஆஹா! நினைத்தேன்! நினைத்தேன்! என் மனதையும் கவரும்படியான சங்கீத ஞானமு முடைய இம்மாது குறமகள் அல்ல. உருவத்தை நோக்கும் பொழுதே தெரிகிறது. கருமேகத்தின் நடுவில் களங்கமற்ற சந்திரன் பிரகாசிப்பது போல் இக் குறவர் கூட்டத்தில் இக்கன்னிகை விளங்கு

கிருள். இவள் யாரோ தெய்வீகம் பொருந்திய மடந்தையா யிருக்கவேண்டும்.—ஹா! எனக்கொரு யுக்தி தோற்றுகிறது. அன்றைத்தினம் சங்கீதத்தில் எனக்குண்டான சந்தேக மொன்றை குருமுகமாய் நின்று தெளிவித்த சரவணபவ னுக்கு, குரு தட்சிணையாக இக் கன்னிகையைக் கொடுப்பே னுயின் என் கடனைத் தீர்த்தவ னுவேன். அதுதான் நல்ல யோசனை—அருகிற் சென்று இவ் வணங்கின் விர்த்தாந் தத்தை விசாரிப்போம். [அருகிற் போகப் பார்க்கிருர்.]

க. மை. [அவரைத் தடியால் தடுத்து] ஏய்! கண் தெரியுதா உங்களுக்கு?

நா. நன்ருய்த் தெரிகிறதப்பா.

க. மை. ஆனு, இது என்னு தெரியுமா?

நா. தெரியும்—பெரும் தடி யொன்று.

க. மை. உங்களுக்கு படிக்க தெரியுமா?

நா. தெரியும் கொஞ்சம்.

க. மை. ஆனு, இத்தெ படிச்சிப் பாருங்க.

நா. [படிக்கிருர்] "ஒரே அடியில் ஏழு!"—ஆஹா! அவ்வளவு பலசாலியா இவன்!

க. மை. காபக மிருக்கட்டும்! கிட்ட வராதைங்கோ!

நா. ஏனப்பா? என்ன காரணம்? என்னை யேன் தடுக்கிருய்? நான் யார் தெரியுமா?

க. மை. அதெல்லாம் உதவாது—நீங்க என்னு ஆம்பிளையா பொம் பிளையா?

நா. [தனக்குள்] அடடா! இந்த பரம ரகசியம் இவனுக்கெப்படி தெரிந்தது!—அப்பா! அதை யேன் கேட்கிருய்?

க. மை. ஆம்பளையானு இந்த புனத்தாங் கிட்ட போகக்கூடாது.

நா. அப்பா, நான் ஒன்றும் தவருன எண்ணங்கொண்டு வர வில்லை—ஒரு நல்ல எண்ணத்துடன் தான்—

க. மை. ஓகோ! எனக்கல்லாம் தெரியும். கல்யாண சமாசாரம் பேச வந்திருக்கரைங்க, என் தங்கிச்சியோடே; இப்பவே சொன்

னேன், கல்யாண சமாசாரம் பேசனு, கால் ஒடிஞ்சி பூடும் பத்திரம்! வந்தவழி பாத்துகினு பூடுங்க.

நா. என்ன ஆச்சரியம்! என் உள்ளத்தை எப்படியோ அறிந்து விட்டானே, ஏதோ மாயாவியா யிருக்கிறுன்!—அப்பா, நீயார்?

க. மை. எங்கப்பாவின் புள்ளே.

நா. இதேது முறட்டுத்தனமா யிருக்கிறது — அப்பா, நான் கொஞ்சம்—

க. மை. என்னுயா அது நச்சு நச்சு இண்ணு தொந்தரவு பண்ரைங்க?

நா. நான் அந்தப் பரணருகில் போகலாமா என்று கேட்கிறேன்.

க. மை. நான் போவக்கூடாது இண்ணு சொல்றேன்.

நா. நான் ஏன் போகக்கூடாது என்கிறுய்?

க. மை. நீங்க ஏம் போவணு மிண்ரைங்க?

நா. அதோ இருக்கும் பெண்ணிடம் சில வார்த்தைகள் பேச வேண்டும், அதற்காகக் கேட்கிறேன்.

க. மை. அதோ இருக்கர பெண்ணேடெ நீங்க பேசக்கூடாது, அதுக்காவத் தடுக்கிறேன்.

நா. அப்பா, நான் யார் தெரியுமா உனக்கு?

க. மை. தெரியவும் தெரியாது, தெரியவும் வாணும்—போங்க.

நா. நான்தான் நாரதன்.

க. மை. அப்படி இண்ணு அர்த்தமென்ன?

நா. [தனக்குள்] கால தாமதமாகிறது. இவனுடன் இப்படிப் பேசினல் பிரயோஜன மில்லை.—அப்பா, நீ மிகுந்த புத்தி சாலியாய்த் தோற்றுகிறுய்.

க. மை. ரொம்ப சந்தோஷம்!

நா. ஆகவே உன் வார்த்தைக்குக் குறுக்காக நடக்க இஷ்ட மில்லை. நான் ஒன்று சொல்லுகிறேன் கேள்; நான் இங்கேயே இருக்கிறேன். உன் தங்கையென்று கூறின அப்பெண் மணியிடம் சென்று, நாரதமுனி வந்திருக்கிறுர், ஏதோ

பேசவேண்டுமென்று விரும்புகிறார், வரலாமா என்று கேட்டு வா, வரலாம் என்று சொன்னால் நான் வருகிறேன், வேண்டா மென்று சொன்னால் வந்த வழி போகிறேன்.

க. மை. உங்களுக்கு கொஞ்சம் புத்தி இருக்குது இண்ணு நினைக்கிறேன். இங்கெதானெ இருங்க ஆமா—நான் போய் கேட்டு வர்ரேன். இதோ இந்த தடியை வைக்கிறேன். இதைத் தாண்டாதைங்க பத்தரம்—ஒரே அடியில் ஏழு!

[பரணருகில் போகிறான்.]

நா. என்ன மடையனா யிருக்கிறான்! முதலில் என்னவோ என்று மதிமோசம் போனேன். அப் பெண்மணியாவது இவன் தங்கையாவது—எல்லாவற்றையும் சீக்கிரம் விசாரித் தறிவோம்.

க. மை. [பரணருகிற் போய்] ஏ! தங்கிச்சி! ஒரு முனி வந்திருக்குது, நானு இங்கே போக்கூடாது இண்ணு ஆட்சேபனெ பண்ணுக்கா, நீ போயி கேட்டுகினுவா, வரலாமிண்ணா வர்ரேன், இல்லாபோனா போரேணிண்ணு சொல்லுது.

வ. என்ன முனி அண்ணா ?

க. மை. நாரதமுனியாம்.

வ. ஆ ஆ! அப்படியா! நாரத முனிவரா வந்திருக்கிறார்! சின்னகுட்டி யண்ணா! அவரை வரக்கூடாது என்று சொல்லலாமா? பெரிய அபராத மாயிற்றே, இதோ நானே போகிறேன் அவரிடம்; தோழி வா.

[வள்ளியும், தோழியும், கடைசி மைந்தனும் நாரதர் இருக்குமிடம் வருகிறார்கள்.]

க. மை. ஐயா, முனி, வரலாமாம்—நான் சொன்னது மாத்திரம் காபகமிருக்கட்டும்.

வ. முனிபுங்கவரே, அடியாள் நமஸ்கரிக்கிறேன்.

நா. சீக்கிரமெ விவாஹப் பிராப்திரஸ்து!

க. மை. அப்படிண்ணா அர்த்தமென்னா?

தோ. சீக்கிரம் கலியாணமாகட்டும் என்று சொல்லுகிறார்.

க. மை. ஏய்! அந்த பேச்செ எடுக்கக்கூடாது இண்ணு நான் முன்னெயெ சொல்லலெ— ஒரே அடியில் ஏழு! பத்திரம்!

வ. அண்ணு! இவ்வாறு பேசாதீர்கள் அவரிடம். பெரியவர் ஆசீர்வாதம் செய்கிறுரே யொழிய வேறென்றுமில்லை— ஸ்வாமி, என் தமயன் தங்களுடைய மஹிமை யறியாது தடுத்ததையும் பேசியதையும் தாங்கள் ஒரு பொருட்டாக எண்ணுமல், மன்னிக்கவேண்டும்.

நா. அப்படியே ஆகட்டும் குழந்தாய், உன் குரலுக்கும் எழிலுக்கும் ஏற்ற குண மிருப்பதைப்பற்றி மஹத்தான சந்தோஷப்படுகிறேன். உன் வேண்டுகோளை மறுப்பேனு? ஆயினும், நீ யார்? உன் விர்த்தாந்தத்தை சவிஸ்தாரமாய் அறிய விரும்புகிறேன்.

வ. முனீஸ்வரரே, என் பெயர் வள்ளி, என் தந்தை பெயர் நம்பி ராஜன், என் தாய் பெயர் நங்கை, என் தந்தை இச்சிற்றாரையாளும் வேடுவராஜன்—

நா. நம்பிராஜன் சொந்த மகளா நீ?

வ. ஸ்வாமி, இதில் ஒரு ரகஸ்யமுண்டு, அதைத் தங்களிடம் கூறுவதற் கென்ன தடை; நான் ஒரு மான் வயிற்றிற் பிறந்ததாகக் கூறுகிறுர்கள். வள்ளிக் கொடியின் மத்தியில் என்னை யீன்றுவிட்டு என் தாய் ஓடிப்போக, பெண்மக வொன்று வேண்டுமென்று பெருந்தவ மிழைத்துக்கொண்டிருந்த நம்பி ராஜன் என்னைக் கண்டெடுத்து அன்று முதல் இன்றுவரை, தன் பெண்ணுகப் பரிவுடன் வளர்த்து வருகிறுர், நானும் அவரையே என் தந்தையாகப் பாவித்து வருகிறேன்

நா. அந்த நம்பிராஜனுக்கு வேறு குழந்தைக ளில்லையோ ?

வ. பெண் குழந்தைக ளில்லை. ஏழு ஆண்மக்கள் இருக்கின்றனர். அவர்களை யெல்லாம் எனக்கு அண்ணன்மார்களாகப் பாவித்து வருகிறேன்.

க. மை, அந்த ஏழு பேர்லெ நான் ஒர்த்தன்—தெரிஞ்சிதுங்களா ?

வ. ஆம், என் கடைசி தமயன்.

நா. ஆ!—மிகவும் சந்தோஷம். வள்ளி, நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

வ. எங்கள் குல ஆசாரப்படி இத் தினைப்புனத்தை காவல் செய்துகொண் டிருக்கிறேன்.

நா. மிகவும் சரி, இப்பொழுது எல்லாம் தெளிவாய்த் தெரிகிறது.

க. மை. எல்லாம் தெரிஞ்சி போச்சே இல்லையோ? இனிமேலெ போய்வாங்க.

வ. சின்னகுட்டியண்ணு, பெரியவர்களிடம் அப்படி பேசலாகாது —ஸ்வாமி, என்னுடைய விர்த்தாந்த மெல்லாம் கேட்டறிந்து கொண்டீர்களே, தங்களைப்பற்றி ஒன்று அறிய விரும்புகி றேன், உத்தரவானுல் கேட்கிறேன்.

நா. சுகமாய்க் கேள்.

வ. தெய்வலோகவாசியாகிய தாங்கள் பூலோகத்தில் அடியாள் இருக்குமிடத்தை நாடிவந்த தெக் காரணமோ?

நா. வேறொன்றுமில்லை. அகஸ்மாத்தாய் இங் கருகாமையிற் செல்ல, பட்சிகளை அறவே ஓட்டவேண்டி ஆலோலமென்று குரல் காட்டி இன்னிசையாய்ப் பாடிய உன் திவ்யமான சங் கீதத்தைக் கேட்டு சங்கீதப் பிரியனுகிய நான் ஆச்சரியப் பட்டு நின்றேன். பிறகு இவ்வளவு இனிய குரலுடன் பாடும் பெண்மணிக்கு குரலுக்கேற்ற குணமிருக்கிறதா என்று அறி யவேண்டு மென்னும் ஆவல் உண்டாயிற்று. அந்தக் குறை யையும் தீர்த்துக்கொண்டேன் உன்னைக் கண்டு உன்னுடன் பேசி.

வ. ஸ்வாமி, எல்லாம் தங்களுடைய பாக்கியம்.

நா. வள்ளி, குழந்தாய், இன்னும் என் மனதில் ஒரு குறைதா னிருக்கிறது. அதையும் நீ தீர்ப்பாய் என்று நம்புகிறேன்.

வ. என்ன குறை ஸ்வாமி அது? என்னுல் கூடுமானுல் தீர்க் கிறேன்.

நா. வள்ளி, உன அருங் குணத்திற்கும் அழகிற்கும், அருங் கல்விக்கும் ஏற்ற கணவன் ஒருவனே இருக்கிறான். அவ

னுக்கு உன்னைக் கலியாணம் செய்வித்துக் கண்குளிர வேண்டு மென்பதே!

வ. அடடடா!—என்ன ஸ்வாமி! நீங்களும் இந்தக் கதை பேசத்தானா வந்தீர்கள்!

க. மை. ஓய்! நான் அப்பவெ சொல்லலெ, வேறெ என்னமானாலும் பேசுங்க. இந்தக் கலியாண சமாசாரம் மாத்திரம் எடுக்காதிங்க. அப்பறம் என் தங்கிச்சிக்கும் கோவம் வரும், எனக்கும் கோவம் வரும். வந்துதா! ஒரே அடியில் ஏழு! பத்தரம்!

நா. கொஞ்சம் பொறு அப்பா—வள்ளி, குழந்தாய், இது என்ன ஆச்சரியம், இதுவரையிலும் முக மலர்ச்சியுடன் என்னுடன் பேசிக்கொண்டு வந்தவள், விவாஹ விஷயத்தைப்பற்றி நான் பேச்செடுத்தவுடன், முகம் மாறுவானேன்?

வ. ஸ்வாமி, இதற்குக் காரணம் என்னைக் கேளாதீர்கள். என்னிடம் யாராவது என் விவாஹத்தைப்பற்றி பேச்செடுத்தால் என்னையுமறியாதபடி எனக்குக் கோபம் வருகிறது. இந்த கெட்ட குணம் என்னிடம் இருக்கிறது.

க. மை. ஒரே அடியில் ஏழு! இந்த தடி என்னிடத்தி லிருக்கிறது! பத்தரம், இப்பவெ சொன்னேன்.

நா. வள்ளி, குழந்தாய்! கன்னிப் பருவமடைந்த உன்னைப் போன்ற கன்னியர் கலியாண வார்த்தை யெடுத்தால் கனிவுடன் கேட்பார்களே யொழிய கடுகடுக்க மாட்டார்களே. நீ மாத்திரம் இந்த இயற்கைக்கு விரோதமாக நடப்பானேன்? இதற்கு ஏதாவது காரணமிருக்கவேண்டும். நீ என்ன உன் ஆயுள் முழுவதும் கன்னியாகவே காலம் கழிக்கத் தீர்மானித்திருக்கிறாயா என்ன?

வ. இது என்ன சங்கடமா யிருக்கிறது—அப்படித்தான் என்று வைத்துக்கொள்ளும்.

நா. குழந்தாய், அப்படி நீ தீர்மானம் செய்வது தவறு; கன்னியாகப் பிறந்த ஒவ்வொருத்தியும் ஒரு கணவனை யடைவது

தான் முறை. இல்லாவிடின் அந்த ஜன்மம் சாபல்யமாகாது என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

வ. என்னடா கஷ்டமா யிருக்கிறது!—ஸ்வாமி, எனக் கிப்பொழுது விவாஹத்தின்மீது பிரியமில்லை, எனக்கு இஷ்டம் வரும்பொழுது பார்த்துக் கொள்ளுகிறேன்.

நா. குழந்தாய், அதுவும் தவறு. இக் கன்னிப் பருவம் என்றும் நிலைத்திருக்குமென்று எண்ணுதே. இக் கன்னிப் பருவம் நீங்கி, முதுமையடைந்தபின் கலியாணம் செய்துகொண்டு என்ன பலன்? அப்பொழுது உனது கையினைப் பிடிக்க கணவன் ஒருவனும் கிடைப்ப தரிது. ஆகவே நான் சொல்வதைக் கேள்—

வ. ஐயா! இதென்ன தொந்தரவாயிருக்கிறது—ஸ்வாமி, அப்படி யிருந்தபோதிலும் எனக்கு விவாஹம் செய்துவைக்க என் தாய் தந்தையர்கள் இருக்கிறார்கள், உமக்கேன் இந்த கஷ்டம்?

நா. அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன். உனக்குத் தக்க கணவனைத் தேடிக் கண்டுபிடித்து அப்படிப்பட்டவனுக்கு உன்னைக் கலியாணம் செய்து கொடுக்க இந்த வேடுவ ராஜனுக்குச் சக்தி யில்லை. எனக்கு அந்த சக்தி உண்டு—ஆகவே என் வார்த்தையைக் கேள்.

வ. ஸ்வாமி, என்னை மன்னிக்கவேண்டும்—இந்த விஷயத்தில் மாத்திரம் என்னை நிர்ப்பந்தியாதீர். உம்முடைய வார்த்தையைக் கேட்கமாட்டேன். போய்வாரும்.

[பாணுக்குப் போகத் திரும்புகிறுள்.]

நா. வள்ளி, வீணுகக் கோபித்துக்கொண்டு போகாதே. பிறகு நீயே துக்கப்படுவாய் நாரதர் வார்த்தையைக் கேட்காமற் போனேமே யென்று.

வ. நான் ஒருகாலும் துக்கப்படமாட்டேன் போம். முனிவராயிற்றே என்று இதுவரையில் பொறுத்தேன். இனி எனக்குக் கோபம் வரும், போய்வாரும்.

நா. வள்ளி, என் கடைசி வார்த்தையைக் கேட்டுவிட்டுப்போ. நான் உனக்காகத் தீர்மானித்திருக்கும் வரனுடைய பெயரை மாத்திரம் கேள்விப்படுவாயாயின் நீயாக என் பாதத்தில் வீழ்ந்து அவருக்குக் கலியாணம் செய்து வைக்கும்படி வேண்டுவாய்.

வ. நான் அப்படி ஒருகாலும் செய்யமாட்டேன்.

நா. சத்தியமாகவா ?

வ. சத்தியமாக! நானிங்கு இனி இருப்பது சரியல்ல. அண்ணு வாரும் போஜன வேளையாயிற்று—நான் வருகிறேன்.

[திரும்புகிருள்.]

க. மை. ஆமாமாம்! நண்ணு காபகப்படுத்தினெ, ரொம்ப பசிக்குது, எனக்கு. [போகிருன்.]

நா. வள்ளி, நானுனக்காகத் தீர்மானித்த வரன்—உங்கள் குல தெய்வமாகிய கழுகா சலபதியே!

வ. [திரும்பிப் பார்த்து] யார் ?

நா. இளமை யென்றும் மாரு முருகனே! கோடி மன்மதா காரணை சேவற்கொடியோனே! மூவிலகிலு முள்ள மாதர் மனதை யெல்லாம் கவரும் மயில் வாஹனனே ? ஆ! நினைத் தேன்! நினைத்தேன்! இப்பொழுது என்ன சொல்லுகிருய் ? —அப்பொழுதே சொன்னேனே கேட்டனையா ?

வ. என்ன சொன்னீர் ?

நா. அந்த வரனுடைய பெயரை மாத்திரம் சொல்வேணுயின் நீயாக மணம்புரிய வேண்டுவா யென்று.

வ. இப்பொழுது நான் அப்படி உம்மை வேண்டப் போகி றேனே ?

நா. இதென்ன இது ? வள்ளி! பசுபதியின் குமாரனுகிய பால சுப்பிரமணியனைப் பார்க்கிலும் உனக்கு சிறந்த பர்த்தா கிடைக்கப் போகிருளே ?

தோ. அம்மா—நீர்—

வ. தோழி! வாயைத் திறக்காதே! சற்று ஒன்றும் பேசாமலிரு, நான் கட்டளை யிடுகிறேன். ஸ்வாமி, நான் நீர் கூறும்படி

யானவரை வரிக்கமாட்டேன் என்று கூறினால்—நீர் அதற்கென்ன பதில் சொல்வீர்?

நா. உனக்குப் பயித்தியம் பிடித்துப் போயிருக்கிறதென்பேன் —அன்றியும்—

வ. அன்றியும் என்ன?

நா. அன்றியும், என் மஹிமை உனக்குத் தெரியாது என்பேன். நான் மனம் வைத்தேனாயின் நீ இசைந்தாலும்சரி, இசையாவிட்டாலும் சரி, அந்த கழுகாசலபதி உன்னைப் பலவந்தத்தினாலாவது சிறையெடுத்து பாணிக்கிரஹணம் பண்ணிக் கொள்ளும்படி செய்வேன் என்பதை அறிவாயாக. குறக்குலத்தில் வளர்ந்து வந்தபடியால் என் மஹிமை நீ அறியாய் போலும்!

வ. ஸ்வாமி! எங்கள் குறக் குலத்தின் மஹிமையை நீர் அறியீர் போலும். அப்படி சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும். நாங்கள் ஒன்று தீர்மானித்தால் மும்மூர்த்திகள் வந்தபோதிலும் மாறமாட்டோம்.

நா. ஆஹா! அப்படியா! என்ன அப்படிப்பட்ட உன் தீர்மானம்?

வ. ஸ்வாமி! நான் ஒரு புருஷனைக் கோரி, அவரையன்றி வேறொருவரையும் கனவிலும் நினைப்பது இல்லையென்று தீர்மானித்திருக்கிறேன்.

நா. ஆஹா! அப்படியா சமாசாரம்? உன் தீர்மானம் பலிக்கிறதோ என் தீர்மானம் பலிக்கிறதோ பார்க்கிறேன்.
இதோ நான் சபதம் செய்கிறேன் எனது ஷண்முகக்கடவுளைக் கொண்டு, உன் மனதைக் கலக்கி, உன்னை மணம் புரியச் செய்கிறேன் சீக்கிரம்.

வ. என் சபதத்தை நான் முன்பே கூறியாயிற்று. அடியாள் மீது தாம் கோபம் கொள்ளலாகாது. உம்முடைய சபதம் தான் நிறைவேறுகிறதோ, என் சபதம்தான் நிறைவேறுகிறதோ பார்ப்போம்.

நா. வள்ளி! அழகில் உன்னையொத்தவர்களில்லையென்று கர்வம் கொண்டிருக்கிறுய்போலும்; அச்செருக்கை சீக்கிரம் அடக்கி என் சபதத்தை நிறைவேற்றுகிறேன், என் பெயர் நாரதன் என்பது உண்மையாஞல்!

வ. உம்மாலானதை நீர் பாரும்.

நா. ஆஹா! அப்படியா சொன்ஞய்! இதோ இட்சணமே போகிறேன் ஷண்முகக் கடவுளிடம். வள்ளி! நான் கூறியது ஞாபக மிருக்கட்டும்.

வ. ஸ்வாமி, நான் கூறியதும் ஞாபக மிருக்கட்டும்.

[நாரதர் விரைவாகப் போகிருர்.]

தோ. என்ன அம்மா இது! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் இந்த அசாத்தியமான காரியத்தை தெய்வ லோக வாசியாகிய நாரத முனிவரே முடித்து வைக்கிறேன். என்று சொன்ஞல் அதற்குத் தடை சொன்னீரே?

வ. பயித்தியக்காரி! என் உள்ளத்தை இன்னும் அறியவில்லையா நீயும்? அப்படி அவரை சபதம் செய்யும்படிச் செய்தால்தான் இக் காரியத்தை முடித்து வைப்பாரென்று அவ்வாறு கூறினேன். நான் ஏதாவது மாட்டேன் என்று சொன்னேஞ கவனித்தனையா?

தோ. அம்மா! உங்கள் சூது எனக்கும் தெரியாமற் போச்சு; வாருங்கள் அம்மணி, சீக்கிரம் பரணுக்குப் போவோம். இல்லாவிட்டால் உங்கள் சின்னகுட்டியண்ணு எல்லாவற்றையும் தீர்த்து விடுவார். [இருவருமாகப் பரணுக்குப் போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றும் காட்சி

இடம்—கழுகுமலைக்குப் போகும் பாதை.

நாரதர் வருகிருர்.

நா. ஹே! சுப்பிரமண்யா! எல்லாம் உனது பாரம். உன் உதவியின்றி என் எண்ணம் ஈடேருது—ஆயினும் இவ் விஷயத்

தில் ஒரு கஷ்டம் இருக்கிறது. மற்றவர் சமாசாரமாயிருந்தால் பால சுப்பிரமண்யத்திடம் சென்று நேராக எளிதில் கேட்டுவிடுவேன். இதில் அப்படிச் செய்வதற் கில்லையே! பால சுப்பிரமண்யத்திடம் சென்று, "உன் விவாஹத்தைப் பற்றி ஓர் சபதம் செய்திருக்கிறேன் அதில் நீயே எனக்குதவவேண்டும்" என்று கேட்பதென்றால் எனக்கே லஜ்ஜையாயிருக்கிறது. அன்றியும ரசிக சிரோமணியாகிய அவன் மனம் எப்படி யிருக்குமோ? மான் வயிற்றிற் பிறந்து குறக் குலத்தில் வாழும் இப் பெண்ணை மணப்பதென்றால் மனம் இசைவானோ என்னவோ?—அன்றியும் இதில் இன்னொரு பெருஞ் சங்கடம் இருக்கிறது. முன்பே ஒரு விவாஹத்தை நான் அருகிலிருந்து நடத்தி வைத்தேன். இப்பொழுது நானே இன்னொரு பெண்ணை விவாஹம் செய்துகொள்ளச் சொல்வது நியாயமாகுமா?—என்ன இவைகளை யெல்லாம் யோசியாது சபதம் செய்து விட்டேன்!—ஆயினும் ஒன்று, களங்கமற்ற என் மனதில் படுவது தவறாகாது; ஆகவே, இனி யோசியாமலும், காலதாமதம் செய்யாமலும், அனைத்தும் அவனது பாரம் என்று, அவனிடம் சென்று என் வாக்கை நிறைவேற்றும் மார்க்கம் தேடுகிறேன். இப்பொழுது இமயமலைக்கு நேராகச் சென்று பார்ப்பேனாயின், தெய்வயானை சமேதனா யிருப்பான். அந்த சந்நிவேசத்தில் நாம் கூறவேண்டியதை வெளிப்படுத்துவது கஷ்டமான காரியமாகும். என்னவென்றாலும் ஸ்திரீஜன்மத்தின் குணம் போகாது. ஆகவே அவன் தனித்திருக்கும் சமயம் நாட வேண்டும்—எனக் கொரு யுக்தி தோற்றுகிறது. இதோ அருகிலிருக்கும் கழுகுமலைக் கோயிலுக்குச் சென்று, ஸ்தோத்திரம் செய்து, தன் நிஜ உருவில் காணவேண்டுமென்று விரும்புவேனாயின் பக்தவத்சலனான சரவணபவன் என் பக்திக்கு ஈடுபடாமற் போகமாட்டான். ஆம்! இதுவே நல்ல யோசனை!—ஹே! சுப்பிரம்மண்யா! எல்லாம் உன் கடாக்ஷம்!

[பாடிக்கொண்டு போகிறார்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் காட்சி

இடம்—கழுகுமலை. சுப்பிரமணியர் கோயில் கர்ப்பக்கிரஹம்.

குருக்கள், பூஜையை முடித்துக்கொண்டு, வந்திருக்கும் ஜனங்களுக்குப் பிரசாதம் கொடுத்துவிட்டு திருக்கதவைத் தாளிட்டு செல்லுகின்றனர். நாரதர் வருகிறார்.

நா. ஓம்! சரவணபவனே!

[ஸ்தோத்திரம் செய்கிறார்; திருக்கதவு தெய்வீகமாய்த் திறக்க, விக்ரஹம் இருந்த இடத்தில் சுப்பிரமணியர் நிஜஸ்வரூபத்துடன் தோற்றுகிறார்.]

முருகா! நமஸ்காரம்.

சு. நாரதமுனிவரே, ஏது பூலோகத்தில் இவ்விடத்தில் வந்து என்னை நாடியது தாம்?

நா. குஹனே! நான் அகஸ்மாத்தாய் இன்றைத்தினம் பூலோக சஞ்சாரம் செய்ய வந்தபொழுது இவ்விடத்தில் அருகாமையில் ஒரு திவ்யமான கனியினைக் கண்டேன். கண்டதும், நமக்கு சங்கீதத்திலுண்டான சந்தேகத்தை நிவர்த்தி செய்த சரவணபவனுக்குக் கைம்மாறாக அக்கனியை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று ஓர் யோசனை பிறந்தது.

சு. அது என்ன கனி அவ்வளவு திவ்யமான கனி?

நா. அதன் இயற்கையான பெருமையை எடுத் துரைக்க என்னாலாகாது. சத்யலோகத்திலும் அதற்குச் சமானமானதை நான் பார்த்ததில்லை. பரிபக்குவமான கனி! படைத்த பிரம்மனது கண்களையும் பறிக்கும்படியான கனி! பல வார்த்தைகளைச் சொல்வதிற் பயனென்? இத்திரிலோகங்களிலும் ரசிக சிரோமணியாகிய உன்னையன்றி அதன் மதுரத்தை யனுபவிக்கத் தக்கவர்கள் மற்றொருவரில்லையென்று சத்தியமாய்ச் சொல்கிறேன்.

சு. எங்கே அந்த கனி? கொண்டு வந்தீரா?

நா. அதைச் செய்யத்தான் அசக்தனா யிருக்கிறேன். உனக்கதை எப்படியாவது அர்ப்பணம் செய்கிறேன். என்று சத்தியம் செய்துவிட்டேன். உன் உதவி யிருந்தாலொழிய என்

வாக்கை நிறைவேற்ற முடியாது என்னால். ஆகவே, எப்படி யாவது இவ் விஷயத்தில் எனக்கு உதவி புரிவதாக நீ திரு வாய்மலர்ந்தருள வேண்டும். இல்லாவிடின் உன் பக்தனாகிய என்னை உலகம் இகழும்.

சு. நாரதமுனி! உம்முடைய வேண்டுகோளுக்குக் குறைக் குண்டோ? அங்ஙனமே ஆகட்டும்.

நா. தன்யனானேன்! இனி நான் உண்மையை உரைக்கிறேன்.

சு. அக் கன்னியின் பெயர் என்ன?

நா. கன்னியின் பெயரா?—ஷண்முகா! நான் உன்னை ஏமாற்ற வேண்டுமென்று பார்த்தால், எல்லாம் தெரிந்திருந்தும் ஒன்றும் தெரியாதவன்போல் பாவித்து என்னை ஏமாற்றி விட்டனையே! இந்தக் குறும்பு உன்னைவிட்டு இன்னும் அகலவில்லையே!

சு. இல்லை ஸ்வாமி! தாங்கள் இவ்வளவு உருவகப்படுத்தி உரைத்தபொழுது அப்படித்தா னிருக்கவேண்டுமென்று எண்ணினேன்.

நா. ஆறுமுகனே! நீ அறியாதது என்ன இருக்கிறது? ஆயினும் நடந்ததைச் சொல்கிறேன் கேள்: இன்று நான் தற்செய லாய் பூலோக சஞ்சாரம் செய்துகொண்டு இப்பக்கமாய் வர, இதுவரையிலும் நான் என்றும் கேட்டிராத இனிய சங்கீதம் என் செவியிற்பட, அப்படியே மெய்ம் மறந்து நின்றேன். பிறகு சங்கீதத்தில் எவ்வளவோ பாண்டித்யமுடைய நமது மனத்தைக் கவரும்படியான ஞானமும் குரலுமுடைய மாது யார் என்று விசாரித்ததில், அவளுடைய பெயர் வள்ளி யென்றும், தெய்வீகமாய் மான் வயிற்றிற் பிறந்தவளென்றும் இம்மலை நாட்டை யாளும் வேடுவ அரசனாகிய நம்பிராஜ னுடைய வளர்ப்புப் பெண்ணென்றும் கண்டறிந்தேன். அப் பெண்மணி அவ்வருங் குரலுக்கேற்ற அருங் குணமும் அளவில் எழிலும் பெற்றிருக்கிறாள். குஹனே! குருமுக மாய் நின்று எனக்கு சங்கீதத்தி லுண்டான சந்தேகத்தை நிவர்த்திசெய்த உனக்கு அப் பெண்மணியை குரு தட்சிணை

யாகச் சமர்ப்பித்து என் கடனைத் தீர்க்கவேண்டுமென்று எண்ணங் கொண்டேன். அன்றியும் அவ்வாறே செய்வதாகப் பிரதிக்ஞையும் செய்துவிட்டேன். ஆயினும் குறக் குலத்தில் வளர்ந்தமையால் குணவதியாயினும் ஒரே பிடிவாதமாய், நீ அவள் குலதெய்வமா யிருந்தும் இதற் கிசையேன் என்கிறாள்.

சு. அப்படி நேராக மாட்டேன் என்று உம்மிடம் கூறினளா?

நா. நேராக மறுக்காவிட்டாலும், தான் யாரோ புருஷனைக்கோரியிருப்பதாயும் அப் புருஷனை யன்றி வேறொருவனையும் தான் கனவிலும் நினைக்கப்போகிற தில்லையென்றும் கூறினள். அப்பொழுது, "நான் எப்படியாவது உனது மனதைக் கலக்கி, நீ இசைந்தாலும் சரி, இசையாவிட்டாலும் சரி, பால சுப்பிரமணியனையே உனக்குப் பர்த்தா வாக்குகிறேன் பார்", என்று சபதம் செய்தேன்.

சு. அதற் கென்ன சொன்னள் அவள்?

நா. உம்முடைய சபதம் நிறைவேறுகிறதோ, என் சபதம் தான் நிறைவேறுகிறதோ பார்ப்போம் விரைவில் என்றாள். அன்றியும், உம்மாலானதை நீர் பாரும் விரைவில், என்று கர்வத்துடன் கூறினள். வேலனே! என் வேண்டுகோளுக் கிசைந்து இவளது செருக்கைக் கருக்கி, அவளை பலாத்காரமாயாவது மணந்து, உன் பக்தனாகிய என் சபதத்தை சத்யமாக்க வேண்டும்!

சு. நாரதமுனி, அங்ஙனமே ஆகட்டும் அஞ்சாதீர்—நீர் விடை பெற்றுக்கொள்ளும் இனி.

நா. பந்தானுகூலா! பரமதயாளா! பக்தவத்சலா! மிகவும் சந்தோஷம். நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

[ஸ்தோத்திரம் செய்கிறார்; ஜோதிஸ்வரூபம் மறைந்து கர்ப்பக் கிரஹத்தின் கதவு தானாக மூடிக்கொள்கிறது.]

கார்ட்சி முடிகிறது.

## ஐந்தாம் காட்சி

இடம்—தினைப்புனம்.

வள்ளியும், தோழியும் பரண்மீதிருந்து கவண்வீசிப் பட்சிகளை ஓட்டிக்கொண் டிருக்கின்றனர். தினைப்புனத்தின் ஓர் புற மாகவிருந்து கடைசிமைந்தன் பலஹாரம் தின்றுக்கொண் டிருக்கிறான். சுப்பிரமணியர் வேட ரூபத்துடன் ஒரு புறம் வருகிறார்.

சு. இச்சாசக்தி கிரியா சக்தி என்னும் இரண்டு சக்திகளையும் அடைய வேண்டியதற்கு, கிரியா சக்தியாகிய தெய்வ யானையை மணந்தாய் விட்டது. இனி இச்சா சக்தியாகிய வள்ளியை மணக்கவேண்டும். இந்த வள்ளியின் மனோபீஷ் டத்தையும் நிறைவேற்றவேண்டும்; நாரதர் சபதத்தையும் பழுதுபடுத்த லாகாது. இதற்கு நாம் தீர்மானித்த லீலை யையே ஏற்ற வழி—முதலில் இங்கு காவலிருக்கும் இவனை அகற்றுவோம். ஒரு வேடிக்கை செய்வோம்!—

[சுப்பிரமண்யர் கடைசி மைந்தன் அருகில் வைத் திருந்த தடியை மறையச் செய்கிறார்; பிறகு வேகமாக தினைப்புனத்தை மிதித்துக்கொண்டு பரணருகில் செல்லப் பார்க்கிறார்.]

க. மை. யாரது? வேடனாட்ட மிருக்குது!—எங்கே என் தடி?

[தேடிக் காணாது]

எங்கே பூட்டது அது? இங்கெதானெ வைச்சேன்!— இதுக்குள்ள உள்ளெ போராம் பார்!

[சுப்பிரமணியர் அருகில் விரைந்து சென்று]

ஏ! ஏ! நிறுத்து!—உனக் கென்ன போங்காலம் வந்ததா என்ன?

சு. ஏனப்பா? என்னை யேன் தடுக்கிறாய்?

க. மை. யார்மேலெ பாணம் போடப் பார்க்கரெ?

சு. அதோ அந்த மான்மீது.

க. மை. உனக்கென்ன பயித்தியம் கியித்தியம் உண்டா? அல்லது கண் பொட்டையா?—கண்ணெ தெறந்துபார்! மானா அங்கே யிருக்குது? என் தங்கெ! தெரியுதா? பத்திரம்!—எங்

கையிலெ அந்த தடி மாத்திரம் இப்பொ இருந்தா!—ஒரே அடியிலெ ஏழு!—

சு. ஆமாம் ஆமாம் அப்பா, என்னை மன்னிக்கவேண்டும்.— வெகு தூரத்திலிருந்து வேகமாய் அதைத் தேடி வந்ததனால் நான் பிரமித்துப் போயிருக்கவேண்டும். ஆயினும் இந்த தினைப் புனத்துக்குள் நுழைந்ததுபோல் தோற்றியது; நீ ஏதாவது மானைப் பார்த்தாயா ?

க. மை. இங்கெ மானும் வர்லெ ஒண்ணும் வர்லெ—போ.

சு. இல்லை அப்பா, எனக்கு சந்தேகமா யிருக்கிறது.—நான் தேடிப் பார்க்கவா ?

க. மை. இங்கெ வரவில்லையா இண்றேன்—எங்கெடா போச்சி அந்த தடி ?

சு. கொஞ்சம் முன்பாக என் கண்முன் தோற்றியது அப்பா.

க. மை. ஒருவெளெ நான் உக்காந்துகினு பலகாரம் திண்ணுகினு யிருந்தேனெ, அது உனக்கு மான் மேயராதுபோல தெரிஞ்சி யிருக்கலாம்.—நீ போ, என்னெ தொந்தரவு செய்யாதெ. இப்பொ வேலெயா யிருக்கிறேன்.

சு. என்ன வேலை ?—என்ன சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாய் ?

க. மை. ஏய்! என்னெ தொந்தரவு செய்யாதே!—இப்பவே சொன்னேன். எனக்குக் கோவம் வந்துதா?—பத்திரம்! பேசாதே வந்தவழி பாத்துகினு போ!—எத்தனெ நாழி இருந்தாலும் இதிலெ கொஞ்சங்கூட கொடுக்கமாட்டேன்,

[தின்றுகொண்டே]

இப்பொ தெரியுதெனக்கு, மானே தேடி வர்ராப் போலெ வந்து இந்த பலகாரத்துக்கு வழிவைக்க பாக்கிறயோ ?

சு. [புன்சிரிப்புடன் பின்புறமாய்க் கையை நீட்ட அதில் ஒரு மூட்டை விழுகிறது.] உன் பலஹாரத்திற்கு நான் பங்குக்கு வரவில்லை —என்னிடம் கொஞ்சம் பலஹார மிருக்கிறது, அதை உனக்குக் கொடுக்கலாமா—நீ பசியால் இளைத்தவன்போ லிருக்கிறாயே—என்று பார்த்தேன்—அவ்வளவுதான்.

க. மை. ஏஏ ! என்னு சொன்னெ ?—பலஹாரமா ?— எதோ எதோ காட்டு பார்ப்போம்.—

சு. இதைச் சாப்பிட்டுப் பார்—அதை யேன் தின்கிறாய் ?—இது என்ன ருசியா யிருக்கிறது பார். [அவனிடம் கொடுக்கிறார்.]

க. மை. [தின்று கொண்டே] அடடா !— ரொம்ப நண்ணா யிருக்கிறதையா !—ஐயா வேடரெ ! இதெ கொஞ்சம் சாப்பிட்டுகினு யிருக்கிறேன்—நீங்க—இந்த தினெப்புனத்துக்குள்ளேபோய் நண்ணாய் தேடிப் பாருங்க !— எனக்குகூட ஒரு — மானு வந்தாப் போலெ காபக மிருக்குது இப்பொ — நண்ணா தேடிப் பாத்து புடிச்சிம் போங்க — அதுவரைக்கும் இந்த மூட்டெயெ நானு பத்தரமா பாத்துகினு யிருக்கிறேன். — போய்ப் பாருங்க ! சீக்கிரம் போங்க ! சீக்கிரம் போங்க !— [ஒருபுறமாகத் தின்றுகொண்டே போகிறான்.]

சு. இனி தோழியைப் பிரித்து, வள்ளியைத் தனிக்கச் செய்ய வேண்டும். [மானைத் தேடுவதுபோல், வள்ளியை உற்றுப் பார்த்தவண்ணம் பரணருகில் போகிறார்.]

வ. தோழி !— என்ன ஆச்சரியம் !— என்னையு மறியாதபடி எனக்கு மனவெழுச்சி யுண்டாகிறது. அதோ நற்சகுனமும் தோற்றுகிறது — என் மனோரதம் சீக்கிரம் முடிவுபெறுமென்று எனக்குள் ஏதோ சொல்கிறது.—

தோ. என்ன அம்மா, அது அசாத்தியமாச்சே! அது எப்படி நிறைவேறும்! அது முடியாத காரியம் என்று உமக்கு எத்தனை முறை சொல்வது ?

வ. அதிருக்கட்டும்—தோழி—அதோ பார், யாரோ ஒரு ஆடவன் நமது தினைப்புனத்தை யெல்லாம் அழித்துக்கொண்டு இந்தப் பக்கமாக வருகிறாற்போ லிருக்கிறதே !

தோ. ஆம் ஆம்! நாம் போய் அவரைத் தடுப்போம் வாரும்— [இருவரும் கீழே இறங்கி வருகின்றனர் ; தோழி முன்பு செல்கிறாள், வள்ளி பின்பாக வருகிறாள்.]

யாரையா அது ? எங்கள் தினைப்புனத்தை யெல்லாம் காலால் மிதித்துப் பாழாக்குகிறீர் !

சு. அம்மா, என்னை மன்னிக்கவேண்டும். இதை நான் கவனிக்கவில்லை. என் மனதைக் கவரும் மானொன்று இப்புனத்தில் மறைந்திருக்கிறது. அதைப் பிடித்துப்போக வந்தேன்.

தோ. இங்கு மானும் வரவில்லை, ஒன்றும் வரவில்லை போம் சீக்கிரம் வெளியே !—உம்மை யாரையா இங்கே வரவிட்டது ! எங்கள் அண்ணன் ஒருவர் வெளியில் காவல் இருந்தாரெ அவைரத் தப்பி எப்படி வந்தீர் இங்கே ?

சு. அம்மா, அவர் உத்தரவுபெற்றே இங்கு வந்தேன். அவரே ஒரு மான் இங்கு வந்ததாக தனக்கு ஞாபக மிருப்பதாகச் சொன்னார். என்னை நன்றாய்த் தேடிப் பார்க்கச்சொன்னார்—

வ. ஐயோ பாவம் ! தேடித்தான் பார்க்கட்டுமே. இந்த தினைப் புனத்திற்கு சேதம் வாராதபடி ஜாக்கிரதையாகத் தேடிப் பார்க்கச் சொல்.

சு. நங்காய், மிகவும் சந்தோஷம். [தேடுவதுபோல் அபிநயிக்கிறார்.]

தோ. அம்மா, இது ஏதோ சூதாய்த் தோற்றுகிற தெனக்கு. மானாவது இங்கு வருவதாவது ? நாம்தான் பார்த்துக் கொண்டே யிருந்தோமே, நமது கண்ணுக்குப் படாமல் எப்படி வந்திருக்கக்கூடும் ?

சு. அந்தோ ! அந்த மான் என துயிருக் குயிரான மானாச்சுதே! அதை நான் சீக்கிரம் அடையாவிட்டால் என் உயிர் நில்லாதே !

வ. ஐயோ பாவம்! தோழி, அப்படியானால் நாமும் தேடிப் பார்ப்போமே—அந்த மான் எப்படி யிருக்குமென்று கேள் அவரை.

தோ. இதையெல்லாம் நீங்கள் நம்புகிறீர்களா ? இதெல்லாம் ஒரு போக்கு நம்மோடு பேசுவதற்கு !

வ. நீ கேட்டுத்தான் பாரேன்.

தோ. உமக்காகக் கேட்கிறேன்—ஐயா, வேடரே, நீர் தேடுகிற மான் எப்படிப்பட்ட மான் ?

சு. "காயாத கானகத்தே நின்றுலாவு நற்காரிகையே
மேயாத மான்புள்ளி மேவாதமான் விழிமான் அந்தமான்
சாயாத கொம்பிரண் டிருந்தும் தலை நிமிர்ந்து
பாயாத மானென்று பட்டதுண்டோ பார்வையிலே."

தோ. அம்மா, நான் அப்பொழுதே சொன்னேனே கேட்டீர்களா? இவர் சொல்லும்படியான மான் உலகில் உண்டா, யாராவது பார்த்திருக்கிறார்களா? நம்மோடு பேசுவதற்கு இந்த யுக்தி ஒன்று எடுத்தார்.—

வ. அப்படியா சமாசாரம்!—நீ கூறியது உண்மையானால்— இதற்கு நான் பதில் சொல்லி யனுப்புகிறேன் தக்கபடி!

சு. மாதே, நீயார்? ஏன் என்மீது இவ்வாறு கோபம் கொள்ளுகிறாய்?

வ. வேடரே! நீர் யார்? எனக்கேன் இவ்வாறு கோப மூட்டுகிறீர்?

சு. நான் யாரென்று சொல்லுகிறேன் கேள், என் பெயர் குஹன், நா னிப்பொழு திருப்பது கழுகுமலை. உண்மையில் ஒரு மானைத் தேடியே இங்கு வந்தேன்.

வ. இன்னும் அந்த மான் சமாசாரத்தை விடமாட்டீர் போலும். இந்த மான் கதை எங்கு கற்றீர்? இந்த மான் சமாசாரத்தை விடா விட்டால் அவமான சமாசாரத்தை அடைவீர்.

சு. நான் அவ்வாறு எண்ணவில்லை. இந்த மான் விஷயம் எனக்கு மிகுந்த நன்மையான விஷயம் தரும் என்று தோற்றுகிறது. ஹா! என்ன அழகிய மான் அது! பொன் மான்! பெண் மான்! என் கண் மான்!—

வ. ஏனையா சும்மாகக் கொட்டி யளக்கிறீர்? இங்கு ஒரு மானும் ஓடி வரவில்லை. ஏன் பொய்யுரைக்கிறீர்?

சு. உம்—மாதே, நீ இவ்வளவு உறுதியாகக் கூறும்பொழுது எனக்கே கொஞ்சம் சந்தேகம் தட்டுகிறது. நான் தூரத்தி லிருந்து பார்த்தபடியால் மயங்கியிருக்கலாம்.—ஒருவேளை, உன் கண்ணைக் கண்டு மான் விழி யென்று மருண்டேனோ என்னவோ?

வ. என் கண்களைப் பார்த்து நீர் மயங்கியதுபோல், உமது வார்த்தைகளைக் கேட்டு நான் மயங்குவேன் என்று எண்ணினீரோ? இந்த ஜபம் என்னிடத்தில் சாயாது, நீர் போம்.

சு. நீ போகச் சொன்னால் போகிறேன் இதோ—ஆயினும் நான் கேட்ட கேள்விக்குப் பதில் கிடைத்தவுடன் போகிறேன்.

வ. என்ன நீர் கேட்ட கேள்வி?

சு. நீ யார் என்று கேட்டேனே.

வ. நான் சொல்லமாட்டேன், போம்.

சு. நங்கையே, இது நியாயமா? என்னிடமிருந்து மாத்திரம் நான் யார், எந்த ஊர், எல்லாம் கேட்டறிந்து கொண்டாயே, நீ மாத்திரம் உன் விர்த்தாந்தம் எனக்குச் சொல்லா திருப்பது நியாயமா?

வ. நீர் ஏமாந்து சொன்னால், நானும் உம்மைப்போல் ஏமாந்து சொல்லிவிடுவேன் என்று நினைத்தீரோ! நான் ஒன்றும் சொல்லமாட்டேன், போம்.

சு. இதோ போய்விடுகிறேன்; உனது விர்த்தாந்தம் சொல்லாமற் போனாற் போகிறது, நான் இப்பொழுது எங்கேயிருக்கிறேன் அதையாவது உரைத்திடுவாய். மானை நாடி வந்த வேகத்தில் வழியினைக் குறிக்க மறந்தேன்.

வ. இன்னும் கொஞ்ச நேரம் நின்று பேசவேண்டுமென்று இச்சை யிருக்கிறாற்போ லிருக்கிறது. இனி உம்முடன் ஒரு வார்த்தையு மாடமாட்டேன் போம்—

சு. சரி, உன் இஷ்டம். [தோழியிடம் சென்று] அம்மா, நீயாகிலும் சொல்—

வ. தோழி! இவருக்கு ஒன்றும் பதில் உரைக்க வேண்டாம் நீ.

சு. மாதே, உன் தோழியை நான் என்ன கேட்கப் போகிறேன் என்பது அறியாமலே பதில் உரைக்கவேண்டாம் என்று கட்டுபாடு செய்கிறாயே! உன்னைப்பற்றி கேட்டு அறிந்து கொள்ளப் போகிறேனே என்று நீ ஐயம் கொள்ளவேண்டாம். நீதான் இவ்வளவு கடுகடுத்துப் பேசுகிறாயே — அருகில்

சிற்றூர் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அங்காவது போய் என் அதிர்ஷ்டம் எப்படி யிருக்கிறதெனப் பார்க்கலா மென்று யோசித்து, அதற்காக அவ்விடம் போக வழியினைக் கேட்கலாமென்று உத்தேசித்தேன்.

வ. அவ்விடம் எதற்காக நீர் போகிறீர்?

சு. எனது நண்பர் ஒருவர், அவ்விடம் ஒரு பெரிய ஆச்சரியகரமான விஷயம் இருப்பதாகச் சொன்னார். அது உண்மையா யென்று பார்க்கப் போகிறேன்.

வ. அது என்ன அவ்வளவு ஆச்சரியகரமான விஷயம்?

சு. அந்த சிற்றூரை யாளும் நம்பிராஜனுக்கு வளர்ப்புப் பெண்ணாகிய வள்ளி யென்கிற மாது சிரோமணி ஒருத்தி யிருக்கிறாளாம். அவளைப்போன்ற குணவதிகளு மில்லை, அழகிகளு மில்லை, கோபக்காரிகளு மில்லை யென்று சொன்னார்—

வ. [பரபரப்புடன்] என்னை இவ்வாறு தூஷித்துப் பேசிய உமது நண்பர் யார் அது?

சு. அடடா!—அப்பொழுதே சந்தேகித்தேன்!—நீதானா அந்த வள்ளி!

வ. ஐயா! என்னைத் தூஷித்த உமது நண்பர் யாரென்று சொல்லும், எனது தமயன்மார்களிடம் கூறி, அவருக்கு என்ன சிட்சை செய்விக்கிறேன் பாரும்!

சு. எதற்காக?

வ. என்னைக் கோபக்காரி யென்று கூறியதற்காக.

சு. அவர் சொன்னது உண்மையென்று நீயே இப்பொழுது ரூபித்துவிட்டு அவரை சிட்சிப்பானேன்?

வ. ஐயோ! இதென்ன சங்கடமாய் நேர்ந்தது! ஐயா, உம்மோடு நான் பேசமாட்டேன் போம்.

சு. சற்று முன்பாகவும் அப்படித்தான் சொன்னாய்! பிறகு நீயாக இத்தனை நேரம் பேசினாய்!

வ. என்னடா தொடுவழக்காய் இருக்கிறது?—ஆமாம், நான் பேசவும் பேசினேன், ஏசவும் ஏசினேன்! என் இஷ்டம்! போம்.

சு. ஏசவும் ஏசினாய் உண்மையே—ஆயினும் முடிவில் ஏமாந்தது நானோ நீயோ? வள்ளி—என்ன சொல்லுகிறாய்?

வ. ஐயோ!—நான்தான் ஏமாந்தேன்—ஐயா! வேடரே! உமக்கொரு நமஸ்காரம். உம்மோடு வாதாட என்னால் முடியாது நீர் போய்வாரும்.

சு. நான் நாடிவந்ததைக் கொடுத்தால் நான் உடனே ஓடிப் போகிறேன்.

வ. என்ன நீர் நாடி வந்தது?

சு. உண்மையான—உனது உள்ளன்பு.

வ. ஆ! ஆ! பார்த்தாயடி தோழி!—இது ஏதோ முழுப்புரட்டாயிருக்கிறது! நீ முன்பு உரைத்தது முற்றிலும் உண்மைதான்.—வேடா! இதுவரையில் ஏதோ மரியாதை பார்த்தேன். இனி பார்க்கமாட்டேன். இட்சணம் இவ்விடம் விட்டு அகல்கிறாயா? அல்லது அடித்துத் துரத்தவா?

சு. அஞ்சுகமே! என்னை அடித்துத் துரத்து. அப்படியாவது உன் கரமானது என் மேனியிற் பட்டால் போதும்.

வ. அதற்கும் ஒரு பதில் வைத்திருக்கிறாயா?—வா ஆனால், என் தோழியிடம் சொல்லி உன்னைத் துரத்துகிறேன்.

சு. சொல்லிப்பார். உன் தோழி என்னைத் துரத்துகிறாளோ, நான் அவளைத் துரத்துகிறேனோ பார்ப்போம். பெண்ணே, நான் சொல்வதைக் கேள்.

வ. ஆ! ஆ! அப்படியா சமாசாரம். முன்பே என்னைப் பெயரிட்டழைத்தபோது, ஏதோ பாவம், எனக்கு மூத்தவன் தானே என்று சும்மா யிருந்தேன். வர வர வாக்கு மிஞ்சுகிறாற் போலிருக்கிறதே! என்னைப் பெண்ணே என்றழைக்க உனக்கென்ன சுதந்தரம்? இன்னும் கொஞ்சம் பொறுத்தால் கண்ணே என்றழைப்பாய் போலும்!

சு. அப்படியே ஆகட்டும். நீயே எனக்கு உத்தரவு கொடுத்தபின் அப்படி அழைப்பதற் கென்ன தடை கண்மணி!

வ. ஆஹா! அப்படியா சங்கதி!—இதோ பார் உன்னை என்ன பாடு படுத்துகிறேன்—தோழி! தோழி! வா இங்கே! இந்த வேடன் ஏதோ பிதற்றுகிறான். இவனை அடித்துத் துரத்து.

சு. [தோழி அருகில் வர] தோழி! அதோ பார் நம்பிராஜன் உன்னை அழைக்கிறார் விரைந்தோடி வரச்சொல்லி!

தோ. ஆம் ஆம்!—இதோ வந்தேன்! [ஒருபுறமாக ஓடுகிறாள்.]

சு. வள்ளி, யார் யாரைத் துரத்தியது பார்த்தாயா?

வ. ஐயோ! இதென்ன மாயமா யிருக்கிறது? இந்த வேடன் மஹா மாயக்காரனா யிருக்கிறான். என் தோழி காதில் ஏதோ ஓத, அவள் என்னைத் தனியே விட்டு ஓடிவிட்டனளே!

சு. வள்ளி! எனது பிராணநாயகி! உண்மையான காதல் உன் மீது நான் கொண்டிருக்கிறேன்—

வ. அந்தோ! கழுகாசலக் கடவுளே! தாம்தான் என்னைக் காத்திடவேண்டும் இந்த வேடனிட மிருந்து.—எட்டி நில்லடா துஷ்டா!

சு. வள்ளி! என்னை என்ன வேண்டுமானாலும் தூஷி! உன் தூஷணமெல்லாம் நான் பூஷணமாகக் கொள்வேன். எதோ, எனக்கொரு முத்தம் கொடு பார்ப்போம்.—

வ. அடா! பாதகா! நான் பெண் பேதை யென்றும் பாராமல் என்னை பலாத்காரம் செய்யப் பார்க்கிறாயா?— ஒரு அடி என் அருகில் எடுத்துவைத்தால் இதோ செங்குத்தாயிப்புற மிருக்கும் பள்ளத்தாக்கில் வீழ்ந்திறப்பேன். பேசாது போகிறாயா எனது அண்ணன்மார்களைக் கூவி யழைத்து உன்னைக்கொல்லவா?

சு. உனது அண்ணன்மார்களை அழை பார்ப்போம்.

வ. [முயன்று] என்ன ஆச்சரியம்! அவர்களைக் கூவி யழைக்க என் நா எழவில்லையே! இவன் யாரோ பெரிய மாயாவியா

யிருக்கிருன் ; என் நாக்கைக் கட்டிவிட்டான்போலும்! ஹா! இனி நான் என் செய்வது! இவன் கையினின்றும் எப்படித் தப்புவது? [கண்ணை மூடி] கழுகாசலக்கடவுளே! கருணாநிதி! உமது பாதங்களையே நம்பினேன்! உமது பாதங்களுக்கு நான் தொண்டு செய்தது உண்மையானல், நீர் எனக்கன்றிரவு வாக்களித்தது உண்மையானல் இவ் வேடனிடமிருந்து இட்சணம் என்னைக் காத்தருளும் காத்தருளும்!

சு. [தனக்குள்] இனி நாம் இவளைப் பரிசோதிக்க லாகாது— வள்ளி! நீ இனி வருந்தாதே, நான் ஓடிப்போகிறேன், அதோ உன் அண்ணன்மார்கள் வருகிருர்கள். வள்ளி, கண் திறந்து பார்! [வள்ளி கண் திறந்து பார்க்க சுப்பிரமணியர் வேங்கை மரமாய் மாறுகின்றனர்.]

நம்பிராஜன், முதல் மைந்தன் கடைசி மைந்தன் தவிர மற்ற மைந்தர்களுடன் வருகிருன்.

ந. வள்ளி, சவுக்கியமா யிருக்கிருயா?

வ. சவுக்கியமா யிருக்கிறேன் அண்ணு.

ந. குழந்தாய்! என்ன முகம் வெளுத்துக் காட்டுகிறது?— எதையாவது கண்டு பயந்தாயா என்ன?

வ. இல்லை அண்ணு.

ந. அவன் எங்கே? உன் சின்ன குட்டி அண்ணன்? உன்னைப் பாதுகாக்க அனுப்பினல் உன்னைத் தனியே விட்டு எங்கு சென்ருன்?

முதல் மைந்தன் கடைசி மைந்தனை இழுத்துக்கொண்டு வருகிருன்.

மு.மை. அதைத்தான் கேளுங்கள், இவன் என்ன செய்து கொண்டிருந்தான் என்று. நான் இந்தப் பக்கமாய் வரும் வழியில், குறட்டை சப்தம் கேட்டது, என்னடாவென்று செடிகளைத் தள்ளிக்கொண்டு போய்ப் பார்த்தால் தம்பி தூங்கிக்கொண்டிருக்கிருர்! — மூட்டையைத் தலையணையாக வைத்துக் கொண்டு!

ந. ஏண்டா, இதுதானு உன தங்கையை நீ காப்பது ?

க. மை. இல்லே அண்ணு! ஒருவேடன் ஓர்த்தன் வந்தான், அவன் திண்ரத்துக்கு கொடுத்தான், அத்தெ திண்ணுகினே இருந் தேனு—அப்படியே தூக்கம் வந்தூட்டுது.

ந. சரி! இனிமேலாவது ஜாக்கிரதையா யிரு, பகலில் தூங் காதே.—அதிருக்கட்டும் மைந்தர்காள், இத் தினைப்புனத் தின் மத்தியில் இந்த வேங்கைமரம் ஏது? என்ன ஆச்சரிய மாயிருக்கிறது! நேற்று நாம் வந்தபொழுது இதைக் கண்ட தாக ஞாபகம் இல்லே!

மு.மை. ஆம் அண்ணு! இது நூதனமாகத்தானிருக்கிறது! ஒரு நாளில் இவ்வளவு பெரியமரம் இங் கெப்படி முளேத்தது ?

ந. இதேதோ பிசாசின் செயலா யிருக்கவேண்டும். இது குழந் தைக்கு ஏதேனும் கெடுதி செய்யினும் செய்யும். அன்றி யும், இதன் நிழலினுல் பயிர் அழியும்—இதை வெட்டி எறி வோம்—எடுத்து வாருங்கள் கோடாலியை.

க. மை. கோடாலி என்னுத்துக்கு அண்ணு? இதோ ஒரே அடியில் ஏழு இருக்குதெ, இத்தாலெ ஒரு அடி அடிச்சா—

மு.மை. தடி ஏழு துண்டா பூடும்!—போடா கெட்டிக்காரன்! கொண்டுவா போய் பெருங் கோடாலியை.

க. மை. அண்ணு!—நான் பொறப்படரபோது இந்த மரத்திலிருந்து கெவுளி சொல்லுது!

ந. ஆம், நானும் கேட்டேன். இது ஏதோ தெய்வீகமாயிருக் கிறது, ஆகவே நாம் இதற்கு ஒன்றும் கெடுதி செய்யலாகாது.

வ. ஆம் அண்ணு, எனக்கு இவ்வளவு அழகாயும் அற்புதமாயும் தோன்றும் இம் மரத்தை வெட்டுவதா என்று வருத்த முண்டாயிற்று.

ந. நாம் அஞ்சுவானேன்? எல்லாவற்றிற்கும் நமது ஷண்முகக் கடவுள் இருக்கிருர் நம்மைக் காக்க—மைந்தர்காள், வாருங் கள் நாம் போவோம்—வள்ளி, நீ ஜாக்கிரதையா யிரு.

[போகிருர்கள்.]

தோழி மறுபடி வருகிருள்

தோ. அம்மா, அந்த வேடன் எங்கே? போய்விட்டானு? அவன் ஒரு பெரும் மாயாவியா யிருக்கிருன்; அண்ணு அழைப்ப தாக அவன் கூறவே, அங்கே போய்ப் பார்த்தால், அவ்விடம் ஒருவரையும் காணேம்.—ஏதோ சூதுக்காரன்—அவனைப் பற்றி பிதாவிடம் சொன்னீரா?

வ. தோழி, அந்த வேடர் எனக்கு எவ்வளவோ கோபம் விளைத்த போதிலும் அவர் மீது பிதாவிடம் குறை கூற என் மனம் எழவில்லை. என்மீது மிகவும் காதல் கொண்டுதான் இருக் கிருர்போலிருக்கிறது தோழி, உன்னிடம் ஒரு ரகசியம் கூறுகிறேன், அன்றைத்தினம் கனவில்கண்ட என் பிராண நாதருடைய முகஜாடை இவரிடமும் இருக்குதடி. அசப் பில் அவர்தானே இவர் என்றே சந்தேகிக்கும்படி இருக்கிற தடி. என் பிராணநாதனுகிய கழுகாசலபதியை யன்றி வேறெவரையும் கடிமணம் புரிவதில்லை என்று நான் பிரதி க்ஞை செய்திராவிட்டால்—இவருக்கு இசைந்திருப்பேன்.

சு. [வேங்கை மரம் மாறி வேடுவ உருவத்துடன் தோற்றுகிருர்.] மிக வும் சந்தோஷம்!

வ. [திடுக்கிட்டுப் பின் திரும்பிப் பார்த்து] ஆ!—யார் அது?—ஐயா! நான் தோழியிடம் கூறியதை யெல்லாம் நீர்கேட்டுக்கொண் டிருந்தீரா என்ன?

சு. ஆம்.

வ. ஐயோ? இனி என்ன செய்வது?—ஐயா வேடுவரே! என்மீது உமக்கு கோபம் வேண்டாம். என் உள்ளத்தைத்தான் அறிந்துவிட்டீரே! இனி உம்மிடம் கூற எனக்கென்ன லஜ்ஜை—ஐயா, நான் கடைசி வார்த்தை கூறுகிறேன். நான் ஒரு ஆடவனை மணப்பதானுல் என் பிராணநாதனுகிய கழு காசலபதியை மணப்பேன்; இல்லாவிடிற் கன்னிகையாகவே என் வாழ்நாட்களைக் கழிப்பேன். இது சத்தியம்.—என்னை இனி தொந்தரவு செய்யாதீர். போய்வாரும் விடை பெற்றுக் கொண்டு.

சு. அப்படியே செய்கிறேன். ஆயினும் ஒன்றுதான் என் மனத்தில் வருத்தமா யிருக்கிறது.

வ. என்ன அது?

சு. என்னைக் கலியாணம் செய்து கொள்ளாமற் போனால் போகிறது—உன் எழிலுக்கும் புத்திக்கும் ஏற்ற கணவன் வேறொருவனும் உனக்குக் கிடைக்கவில்லையா? போயும் போயும் அந்த கழுகாசலபதியின் மீதுதானா காதல் கொள்ள வேண்டும் நீ? அவரையா கடி மணம் புரியவேண்டும் நீ?

வ. ஐயா! என்ன என் பிராணநாதருக்குக் குறை? அவரை விட உத்தமமான புருஷன் யார் இருக்கிறார் இத் திரிலோகங்களினும்?

சு. சொல்கிறேன் கேள். யாரையாவது கலியாணம் செய்து கொள்வதென்றால், அவனுடைய குலம் என்ன, கோத்திரம் என்ன, தாய் தந்தையர் யார், பந்துக்கள் எப்படிப்பட்டவர்கள், இதெல்லாம் விசாரிக்க வேண்டாமா?—இந்த கழுகாசலபதி ஜாதி ஆண்டி ஜாதி.—கோத்திரமேயில்லை—அவனுடைய தந்தை தான்தோன்றி! தலை மண்டையைக் கையில் வைத்துக் கொண்டு பிட்சை யெடுப்பவன். தாயோ முழு நீலி! தமையனோ தறிதலை—அவன் சுய குணத்தை சூட்சுமமாகச் சொல்லுகிறேன் ஒரு வார்த்தையில்—தகப்பன் சாமி அவன்!

வ. ஐயா! வேடரே! போதும் நிறுத்தும். நான் எதையும் பொறுப்பேன்! என் பிராணநாதரை இழிவாகக் கூறிடில் அதை மாத்திரம் ஒரு பொழுதும் பொறுக்கமாட்டேன். அவருடைய பெருமை அற்ப வேடராகிய உமக்கென்ன தெரியப் போகிறது? அவருடைய அரிய குணங்களையும் அழகையும் ஆண்மையும் அறைந்திட அந்த ஆதிசேஷனாலுமாகாதென்று நான் சத்தியமாய்க் கூறுவேன்.

சு. என் பெருமையைவிட அவனுக்கு அணுவளவும் அதிகம் இல்லையென்று நான் சத்தியமாய்க் கூறுவேன்!

வ. இதென்னடி வல்லடி வழக்கா யிருக்கிறது ?—ஐயா ! நீர் போகிறீரா என்ன இவ்விடம் விட்டு ? இல்லாவிட்டால் எனக்குக் கோபம் வரும் !

சு. இனிமேலா வரப்போகிறது ? இப்பொழுது இல்லையோ ?

வ. இது என்னடி தொல்லையா வந்திருக்கிறது—உடனே போகிறீரா என் அண்ணன்மார்களைக் கூப்பிடவா ?

சு. முன்பு ஒருமுறை முயன்று பார்த்தாயே ?— வள்ளி, என்ன சொல்லுகிறாய் ? [அருகில் நெருங்குகிறார்.]

வ. அந்தோ ?—தூரநில் துஷ்டா ! [கண்ணை மூடி] கழுகாசலபதி ! நீர்தான் அடியாளைக்காத்திடல் வேண்டும் இவ்வேளை ! இந்த வேடர் என்னைத் தொந்தரவு செய்யாதபடி அகலச் செய்யும் !

சு. இனி நாம் இங்கிருப்பது நியாயமல்ல ! [மறைகிறார்.]

வ. [கண் திறந்து] அப்பா !—அகன்றார் வேடர்! [சுற்றிப் பார்த்து] ஆ! இங்கிருந்த வேங்கை மரத்தையும் காணோமே !—என்ன மாயம் !—தோழி, இப்படிவா !—நான் என்ன கனவு காண்கிறேனோ ? விழித்திருக்கிறேனே ! ஒரு வேளை இதெல்லாம் சித்தப் பிரமையோ ?—தோழி, வா பரணுக்குப் போவோம். என்ன மனம் பலவாறு மயங்கியிருக்கிறது. எது நேர்ந்த போதிலும் என் தீர்மானத்தினின்றும் மாத்திரம் நான் மாறமாட்டேன். [போகின்றனர்.]

காட்சி முடிகிறது.

## ஆறும் காட்சி

இடம்—தினைப்புனத்திற் கருகாமையிலுள்ள ஓர் இடம்.

நம்பிராஜன், தன் ஏழு மைந்தர்களுடனும், மந்திரியுடனும், சில வேடர்களுடனும் வருகிறான்.

ந. மந்திரி, நீ கூறியபடியே ஆச்சர்யமாகத்தானிருக்கிறது ! இவ்வளவு சீக்கிரத்தில் பால் பிடித்து கதிர்க ளெல்லாம் முதிர்ந்திருக்கிறது விந்தையாகத்தானிருக்கிறது.

ம. நம்முடைய குல தெய்வத்தின் ஆக்ஞைப்படி நாம் நடந்த படியால் இவ்வாறு நேர்ந்ததென நம்புகிறேன்.

க. மை. ஏ! ரொம்ப தெரியுமையா உங்களுக்கு! நானு ஜாக்கிரதெயா பாத்து வந்ததொட்டு அல்லாம் சரியா இருக்குது. இல்லாப் போனா ஒரு கதிர் இருக்குமா? அல்லாம் பட்சிங்க கொறிச் சூட் டிருக்காதா? இத்தெ பாத்தைங்களா? ஒரே அடியில் ஏழு!—.

ந. மிகவும் சந்தோஷம்! உண்மைதான் பட்சிகளால் கதிர்கள் ஒன்றும் சேதப்பட வில்லை.

மூ. மை. என்ன அண்ணா! அவன் கூறுவதையா நம்புகிறீர்கள்? அவனாவது பட்சிகளை ஓட்டுவதாவது? அவனுக்கு சாப்பிடு கிறதற்கும் தூங்குவதற்குமே சரியாக இருக்கிறது பொழு தெல்லாம்.

க. மை. ஏ! நீ பாத்தையோ! பெரிய அண்ணாத்தெ யாச்சே இண்ணு உட்டேட்டேன் நானு. இல்லாப்போனா — ஒரே அடியில் ஏழு!

ந. கொஞ்சம் பொறுங்கள்!—அதோ யாரோ பெரியவர் நாமிருக்கும் இடத்தை நோக்கி வருகிறாற்போலிருக்கிறது. யாரோ மஹானாகக் காணப்படுகிறார். நாம் எதிர்கொண் டழைப்போம் வாருங்கள்.

சுப்பிரமணியர் வயோதிகனாக வருகிறார்.

சு. சிவ சுப்பிரம்மண்யம்! சிவ சுப்பிரம்மண்யம்!

ந. ஸ்வாமி, வரவேண்டும் வரவேண்டும்.

[எல்லோரும் நமஸ்கரிக்கிறார்கள்.]

சு. தீர்க்காயுஷ்மான்பவ!—அப்பனே, நீ யார்?

ந. பெரியவரே, அடியேன் நம்பிராஜன், இச் சிற்றூரை யாளும் வேடுவத் தலைவன்.

சு. இவர்களெல்லாம் யார்?

ந. இவர்கள் எனது ஏழு மைந்தர்கள்—அதோ நிற்பவன் என் மந்திரி, மற்று முள்ளவர்கள் என் வேலையாட்கள்.

சு. சந்தோஷம்!— இங்கெல்லாம் காட்டுப் பிரதேசமாயிருக்கிறதே யென்று பயந்து கேட்டேன்.—கோபித்துக் கொள்ளாதீர்கள்.

ந. ஸ்வாமி, கோபம் ஒன்றுமில்லை.—தொலைதூரம் நடந்து வந்தமையால் மிகவும் களைத்திருக்கிறாற்போலிருக்கிறது, இப்படி வீற்றிருங்கள்—ஸ்வாமி, தாங்கள் எந்த தேசமோ?

சு. நான் சாதாரணமா யிருப்பது இமயமலைச் சாரல்.

ந. அப்படியா? ஆனால் தாங்கள் அவ்வளவு தூரத்திலிருந்து இவ்விடம் வந்ததெக் காரணமோ?

சு. தெற்கே கன்யாகுமரி யிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த குமரி தர்சனம் கிடைத்தால் நான் எடுத்த இந்த ஜன்மம் சபலமாகுமென்று நாடி வந்தேன்—அங்கே போக வழி காட்டினால்—நான் போகிறேன்.

ந. ஐயோ! ஸ்வாமி, அக் கன்யாகுமரிக்கும் இதற்கும் அநேக காததூரம் இருக்கிறதே! தாங்களோ வயதால் மிகவும் மெலிந்திருக்கிறீர்கள், பிரயாண பாதையினால் களைத்துமிருக்கிறீர்கள். ஆகவே தாங்கள் இவ்விடம் கொஞ்சம் தங்கி யிருந்து இளைப்பாறி களைப்பு நீங்கி, பிறகு செல்லலாம்.

சு. அப்பனே, இங்கே தங்கி யிருப்பதென்றால், எல்லாம் காடாகக் காணப்படுகிறதே, காட்டு மிருகங்கள் முதலியன சஞ்சரிக்கும் இடமாயிற்றே, என்று—

க மை. தாதா, அதுக்கு ஒண்ணும் பயப்படத் தேவலெ. இதோ பாத்தைங்களா என் கையிலெ என்ன இருக்குது இண்ணு? ஒரே அடியிலெ ஏழு! ஒண்ணும் கிட்ட வராது பயப்படாதைங்க.

ந. ஸ்வாமி, அதெல்லாம் தாங்கள் ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. நாங்களெல்லோரும் இருக்கிறோம் அதிதியாக வந்த தம்மைப் பாதுகாக்க.

சு. அன்றியும், இங்கிருப்பதென்றால் இந்தக் கிழத்திற்குத் தக்கபடி சுஸ்ருஷை யார் செய்வார்கள் இங்கே?

க. மை. நீங்க ஒண்ணும் பயப்படாதைங்க தாதா, நானிருக்கிறேன் !

சு. அப்பா, நீயா ? உன்னைப் பார்த்தாலே எனக்குப் பயமாயிருக்கிறதே. நம்பிராஜனே, இந்த பிள்ளையாண்டான் என்ன உன் மூத்த குமாரனா ?

ந. இல்லை ஸ்வாமி, இவன் என் கடைசி மைந்தன்.

சு. அப்பா ! கடைசி மைந்தனே இப்படி யிருந்தால் மற்ற இவனுடைய அண்ணன்மார்க ளெல்லாம் எப்படி இருப்பார்களோ ?

ந. [ஒரு புறம் போய்] மைந்தர்காள், எனக்கொரு யோசனை தோற்றுகிறது. இவரோ பெரிய மஹானாய்த் தோற்றுகிறார். இவர் பாதத்தின் ஸ்பர்சம் பட்ட மாத்திரத்தில் என் உடல் எல்லாம் பூரித்தது. ஆகவே, இங்கு அருகாமையிலிருக்கும் வள்ளியின் பரணருகில் கொண்டுபோய் விட்டு, நமது குழந்தையை சுஸ்ரூஷை செய்யும்படிச் செய்தால், இந்த மஹானுடைய அநுக்ரஹம் நம்முடைய குழந்தைக்குக் கிடைக்கும். அவளுக்கு இரண்டு தினங்களாக ஏதோ உடம்பு அசௌக்கியமா யிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த அசௌக்கிய மெல்லாம் போகுமென்றும் எனக்குள் ஏதோ தோற்றுகிறது.

மூ.மை. அண்ணா, அப்படியே செய்யலாமென்று எனக்கும் தோற்றுகிறது.

க. மை. ஏ ! இந்த கெழத்துக்கா வேலெ செய்யும் நம்ப தங்கிச்சி ?

ந. அடே ! அதனப் பிரசங்கி ! பெரியவரை அப்படி கூறாதே ! ஆயினும், இவன் கூறியதில் ஒரு நியாய மிருக்கிறது.— வள்ளியின் மனதை அறிந்தே நாம் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.—அடே, நீ போய் சீக்கிரம் வள்ளியை அழைத்து வா. [கடைசி மைந்தன் போகிறான்.]

சு. சிவ சுப்பிரம்மண்யம் ! சிவ சுப்பிரம்மண்யம் !

ந. ஸ்வாமி, தங்கள் விஷயத்தில் எனக்கு ஒரு பெரிய சந்தோஷம். தாங்களும் எங்கள் குல தெய்வமாகிய சுப்பிரமணியக் கடவுளையே வழிபடுகிறாற்போலிருக்கிறதே.

சு. அப்பனே, என் தகப்பனார் ஒரு முறை கூறினார், சிவத்தையும் சுப்பிரம்மண்யத்தையும் சேர்த்து சிவசுப்பிரம்மண்யம் என்று மனதார உச்சரிப்பவர்களுடைய மனோபீஷ்டம் எல்லாம் நிறைவேறுமென்று—சிவ சுப்பிரம்மண்யம்! சிவ சுப்பிரம்மண்யம்!

கடைசி மைந்தன் வள்ளியுடன் வருகிறான்.

வ. அண்ணா, நமஸ்காரம். என்னை அழைத்தீர்களாமே.—இது யார் அண்ணா யாரோ மஹான் வந்திருக்கிறாரே?

ந. வள்ளி, அவர் பொருட்டுதான் இங்கு உன்னை வரவழைத்தேன். இந்த மஹான் இமயமலைச் சாரலிலிருந்து வெகு தூரம் வந்திருக்கிறார். கன்யாகுமரியை நாடிப் போகிறாராம். இங்கே கொஞ்சம் தங்கியிருந்து இளைப்பாறிப்போகலாமே என்று கேட்டுக்கொண்டேன்.

வ. அப்படியா, மிகவும் சந்தோஷம் அண்ணா, எனக்கும் இவரைப் பார்க்கும்பொழுதே இவர் ஒரு பெரிய மஹான் என்றே தோற்றுகிறது.

சு. அப்பனே, அது யார் அது? ஒரு இனிய குரல் என் செவியிற் படுகிறது, யாருடையதோ அது?

ந. ஸ்வாமி, இவள் என் பெண்ணாகிய வள்ளி.

வ. ஸ்வாமி, அடியாள் வள்ளி நமஸ்கரிக்கிறேன்.

[பாதத்தில் நமஸ்கரிக்கிறாள்.]

சு. குழந்தாய்! சீக்கிரமேவ விவாஹப் பிராப்திரஸ்து!

க. மை. ஏய்! இதென்னண்ணா இது! யார் வந்தாலும் அத்தெ தான் சொல்ராங்க!

ந. வள்ளி, இப்படி வா. [ஒருபுறமாக] குழந்தாய், இந்த மஹானை உன் பரணருகில் தங்கி யிருக்கச் செய்து அவருக்கு நீ சுஸ்ரூஷை செய்துவந்தால் அவருடைய அனுக்கிரஹம் உனக்குக் கிடைத்து உன் உடம்பு அசௌக்கிய மெல்லாம் சீக்கிரம் நீங்கி, நீ சகலபாக்கியத்தையும் பெறுவாய் என்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது. உன் இஷ்டம் எப்படியோ?

வ. அண்ணா, பழம் நழுகிப்பாலில் வீழ்ந்ததுபோலும்! அதையே நான் கேட்கலாமென்று வாயெடுத்தேன். இந்த மஹா

னுடைய தர்சனம் கிடைத்த மாத்திரத்தில் எனக்கு மஹத்தான சந்தோஷம் உண்டாச்சுது. நான் அவரது பாதங்களைத் தீண்டி நமஸ்காரம் செய்தபொழுது, என் உடம்பெல்லாம் பூரித்தது. ஆகவே, இப்படிப்பட்ட பெரியவருக்குப் பணிவிடை செய்து அவரது அனுக்கிரஹத்தைப் பெறுவேனாயின், என் உடம்பிலுள்ள அசௌக்கிய மெல்லாம் போய், என் மனோபீஷ்ட மெல்லாம் நிறைவேறுமென்றே நினைக்கிறேன். அப்படியே செய்கிறேன் அண்ணா.

ந. [சுப்ரமண்யரிடம் சென்று] ஸ்வாமி, தங்களுக்குப் பணிவிடை செய்ய இதோ யிருக்கும் என் செல்வக் குழந்தையாகிய வள்ளியை நியமிக்கிறேன். தாங்கள் இவ்விடம் கொஞ்ச காலம் இருந்து எங்கள் ஆதிக்யத்தைப் பெற்று, என் குழந்தைக்கு ஆசீர்வாதம் செய்து பிறகு போக வேண்டும்.

சு. அப்பனே, உன் இச்சைப்படியே ஆகட்டும். உன் குழந்தையின் இனிய குரலைக் கேட்டபொழுதே என் மனம் சந்தோஷ மாச்சுது. ஆயினும் அவள் மனம் எப்படி யிருக்குமோ? இப்படி அருகில் வரச் சொல்.

வ. ஸ்வாமி, இதோ வந்தேன்.

சு. [தலையைத் தடவிக் கொடுத்து] குழந்தாய்! உன் குணத்திற்கு மெச்சினேன். ஆயினும் ஒரு சந்தேகம். இந்தக் கிழத்திற்கு மன மொப்பி பணிவிடை செய்வாயா அருவெறுப்பில்லாமல் என்பது தான்.

வ. ஸ்வாமி, அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்கவேண்டுமே, அப்படியே தங்கள் இச்சைப்படியே, நடந்துகொள்ளுகிறேன்.

சு. மிகவும் சந்தோஷம், வள்ளி, நீ கூறியது ஞாபகமிருக்கட்டும்.

ந. ஸ்வாமி, இனி தாங்கள் புறப்படலாம். இதோ அருகாமையில் வள்ளியின் பரண் இருக்கிறது, அங்கே அழைத்துக்கொண்டுபோய் விடுகிறோம்.

சு. சிவ சுப்பிரம்மண்யம்! சிவ சுப்பிரம்மண்யம்!

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## ஏழாம் காட்சி

**இடம்**—வள்ளியின் பர்ணசாலை யருகில் ஓர் இடம்.

**சுப்பிரமணியர்** புலித்தோலின்மீது உட்கார்ந்திருக்கிறார்.
பக்கத்தில் ஒருபுறமாக
**கடைசி மைந்தனும் வள்ளியும்** நிற்கின்றனர்.

க. மை. ஏ! தங்கிச்சி, நம்ப சாப்பிடப் போலாம் வா. இந்தக் கெழத்துக்கு பசி யெடுக்கர வரைக்கும் நம்ப காத்துகினு இருக்க முடியாது.

வ. அப்படி யெல்லாம் சொல்லாதே அண்ணா! அது அபராதம். தாதா நிஷ்டையி லிருக்கிறார். நிஷ்டை கலையட்டும், கேட்போம்.

க. மை. நிஷ்டெயிலெ இருக்கிறாரா! கண்ணெ மொள்ள மொள்ள தெறந்து உன்னெ பாத்துகினு இருக்கிறாரே, நான்தான் பாத்தேனே.—எனக்கு ரொம்ப பசியா யிருக்குது இப்போ—

வ. ஆனால் நீ பரணுக்குப் போய் சாப்பிடு, நிஷ்டை தீர்ந்தவுடன் இவரை அழைத்துக்கொண்டு வருகிறேன் நான்.

க. மை. சரி, ஆனா நீ இண்ணைக்கு பட்டினிதான்!

[பரணருகிற் போகிறான்.]

சு. [கண் திறந்து] சிவ சுப்பிரம்மண்யம்! சிவ சுப்பிரம்மண்யம்!

வ தாதா, நிஷ்டை தீர்ந்ததா? இனி வாரும் பரணுக்குப் போவோம் உணவு கொள்ள.

சு. வள்ளி, என் கால் மிகவும் ஓய்ந்துபோ யிருக்கிறது. நடக்க முடியாது என்றால் இப்பொழுது, நீ போய் அந்த உணவை இங்கு கொண்டுவந்துவிடு.

வ. அப்படியே ஆகட்டும். [பரணுக்குப் போகிறாள்.]

சு. என்ன ஆச்சர்யம்! வள்ளியின் மனம் கொஞ்சமாவது திரும்புவதாகக் காணோம். நாம் என்ன யுக்தி செய்தபோதிலும் ஏதாவது இடையூறு வந்து நேர்கிறது. — ஆயினும் இந்த சூழ்ச்சியினால் நமக் கிணங்கா திருக்கிறளோ பார்ப்போம்.

வள்ளி பாத்திரத்தில் தேனும் தினைமாவும்
கொண்டு வருகிருள்.

வ. தாதா, இதோ உமக்கு உணவு கொண்டுவந்தேன், புசியும்.

சு. என்ன கொண்டுவந்தாய் வள்ளி?—இது என்ன இது?

வ. தேனும் தினைமாவும் கொண்டு வந்தேன்.

சு. தேனும் தினைமாவுமா!

வ. ஆம் தாதா, இங்கு வேறென்ன கிடைக்கும்? — ஆனுலும் தாதா, இதைக் கேவலமாக நினைக்கவேண்டாம். இது மிகவும் ருசியா யிருக்கும், நல்ல பலத்தைத் தரும், இதைக் கலந்து புசியும்.

சு. ஐயோ! அதை எப்படிக் கலப்பது எனக்குத் தெரியாதே.

வ. நான் கலந்து வைக்கிறேன். [அங்ஙனமே செய்து.]
புசியும்.

சு. [கை நடுக்கி] ஐயோ! வள்ளி! என் கை நடுக்குகிறதே, என்ஞல் அதை எடுத்துச் சாப்பிட முடியவில்லை. வள்ளி, நீ நல்ல பெண்ணல்ல? கொஞ்சம் எனக்கு இதை ஊட்டிவிடு.

வ. என்ன தாதா இது? நீங்கள் என்ன குழந்தையா என்ன நான் ஊட்ட!

சு. வள்ளி, உனக்குத் தெரியாது. எங்கள் அம்மா, என்னைக் குழந்தை என்றுதான் நினைத்துக்கொண் டிருக்கிருர்கள் இன்னமும்.

வ. தாதா, உங்கள் தாயார் இன்னமும் உயிரோடிருக்கிருர்களா?

சு. இருக்கிருர்கள் — வடக்குப் பிரதேசத்தில்! அவர்களை விட்டு விட்டு வந்ததின் கதி இது. அவர்கள் பக்கத்தில் இருந்தால் இப்படி நான் பசியோடிருக்கப் பார்த்துக்கொண் டிருப்பார்களா?—

வ. தாதா, துக்கப்படாதீர்கள்! நான் ஊட்டிவிடுகிறேன்.— வாயைத் திறங்கள். [வாயைத் திறக்க, வள்ளி தினைமாவை ஊட் டக்கையைக் கொண்டு வரும்பொழுது அதனைப் பற்றப் பார்க்கிருர்.]

தாதா! உங்கள் கையை எங்கே கொண்டு வருகிறீர்கள்?

சு. வள்ளி, வேறொன்றுமில்லை இந்த தாடி மீசையைத் தள்ளிக் கொள்ளுகிறேன்.

வ. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை, என்று சொல்லுகிறார்களே, இதுதான் போலும். தாதா, இதை வளர்ப்பானேன், இப்படி கஷ்டப்படுவானேன்?

சு. நானா வளர்த்தேன்? இதெல்லாம் கர்மம் வள்ளி, கர்மம்! —உம், ஊட்டு.

வ. தாதா, என்ன மறுபடியும் கை மேலே வருகிறதே!

சு. வேறொன்று மில்லை. உன் கை நடுக்கி, இந்தத் தினைமாவைக் என் கண்ணில் மூக்கில் எங்கே போடுகிறாயோ என்று சரியாக வாயில் போடும்படிச் செய்வதற்கு.

வ. தாதா, அப்படி ஒன்றும் வேண்டாம்; உங்களுக்குத்தான் கை நடுக்கம் என்றால் எனக்குக் கூடவா கை நடுக்கம்? உங்கள் கை கீழேயே யிருக்கட்டும்.

சு. அப்படியே உன் இஷ்டப்படி.

வ. ஆனால்—புசியும்—மெல்ல மெல்ல! நன்றாய் மென்று புசியும், இல்லாவிட்டால் தொண்டையில் அடைத்துக் கொள்ளப் போகிறது!

சு. ஆ! ஆ!—வள்ளி வள்ளி! நீ சொன்னபடியே—அடைத்துக் கொண்டதே!—அடைத்துக் கொண்டதே!

[பாசாங்கு செய்கிறார்.]

வ. ஐயோ! சொன்னால் கேட்காமல் போனீரே! இப்பொழுது நான் என்ன செய்வது?

சு. ஐயோ! ஐயோ! கொஞ்சம்—மார்பில்—தடவிக் கொடு—என் பிராணன் போகும்போ லிருக்கிறதே!

வ. ஐயோ! இந்த தர்ம சங்கடத்திற் கென் செய்வது? எப்படியும் தீண்டித்தான் தீரவேண்டும்—முருகா! எல்லாம் உமது செயல்!—[மார்பில் தடவிக் கொடுக்கிறாள்.] தாதா, இப்பொழுது எப்படி யிருக்கிறது?

சு. வள்ளி,— கொஞ்சம் முன்பாக நான் மடிந்தே யிருப்பேன்— உன் கரம் பட்ட மாத்திரத்தில் பிழைத்தேன்.

[அவள் கரத்தை முத்தமிடுகிறார்.]

வ. தாதா! இதென்ன இது?

சு. ஒன்றுமில்லை வள்ளி, நீ கோபித்துக் கொள்ளாதே! எனக்கு உயிரைக் கொடுத்த கரத்திற்கு ஒரு முத்தமாவது கொடுக்கலாகாதா? நான் உனக்கு வேறென்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!

வ. நீங்கள் செய்யத்தக்க கைம்மாறு ஒன்றிருக்கிறது; அதைச் சொல்கிறேன், அதன்படி செய்யுங்கள்.

சு. அதென்ன வள்ளி?

வ. என்னைத் தீண்டாதீர்கள், அவ்வளவுதான்.

சு. ஏன் அப்படி?

வ. அதற்கு ஒரு காரணம் உண்டு, அதை அப்புறம் சொல்கிறேன்.—தாதா, புசித்தது போதுமா, இன்னும் வேண்டுமா?

சு. போதும், அந்த ஒரு கவளமே போதும். எனக்கு மிகவும் தாகவிடாயா யிருக்கிறது. இங்கேதாவது ஒருசுனை யருகிற் கொண்டுபோய் விடு என்னை. வாயலம்பிக்கொண்டு இரண்டு கை ஜலம் உண்டு இளைப்பாறுகிறேன்.

வ. அதோ அருகில் ஒரு சுனை இருக்கிறது, வாருமங்கே வழி காட்டுகிறேன்.

சு. [மெல்ல எழுந்து தடமாடி] வள்ளி! வள்ளி! என்னால் நடக்க முடியவில்லை. என் கையைப் பிடித்துக் கொஞ்சம் அழைத்துக்கொண்டு போ.

வ. அது முடியாது தாதா! நான் சொல்வதைக் கேளுங்கள்.— இதோ என் அண்ணன் வைத்துவிட்டுப்போன கழி யிருக்கிறது; அதைப் பிடித்துக்கொண்டு மெல்ல நடந்து வாருங்கள்.

[கழியைக் கொடுக்கிறாள்.]

சு. வள்ளி! வழி யெப்படி? கண் நன்றாய்த்தெரிய வில்லையே!

வ. என்னடி சங்கடமா யிருக்கிறது! இந்த முனையை இப்படித் தாருங்கள் நான் பிடித்து அழைத்துக்கொண்டு போகிறேன். மெல்ல பின்பாக நடந்து வாருங்கள்.

சு. அப்படியே ஆகட்டும்.

வ. தாதா! அந்த முனையைப் பிடித்துக்கொண்டு வாருங்கள் என்றால் — உங்கள் கை ஏன் என் கையருகில் வருகிறது — நான் அப்பொழுதே சொன்னேன்.

சு. வள்ளி, நீ தவறாக நினையாதே, என் கை நழுகிப் போகிறது.

வ. அதெல்லாம் உதவாது, கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள்.

சு. அப்படியே ஆகட்டும்.

வ. [திரும்பிப் பார்த்து] தாதா! நான் அவ்வளவு சொல்லியும் மறுபடியும் உங்கள் கை என் அருகில் வருகிறது பாருங்கள்!

சு. வள்ளி, வேறொன்று மில்லை இந்தக் கழி நழுகிப்போனாலும் உன் கை நழுகாதே, ஆகவே உன் கையைப்பிடித்துக் கொண்டு வரலாமென்று பார்க்கிறேன்.

வ. தாதா, அதெல்லாம் உதவவே உதவாது. நான் இப்பொழுதே சொன்னேன், என்னைத் தொட்டால் இப்படியே உம்மை விட்டு விட்டு ஓடிப்போய்விடுவேன்! பத்திரம்.

சு. உன் இஷ்டம்.

வ. தாதா, இதோ சுனை யருகில் வந்து விட்டோம் — இதில் மெல்ல இறங்கி தண்ணீர் குடியும்.

சு. வள்ளி, இதென்ன பாசி படர்ந்திருக்கிறதே! — நல்ல சுனையைக் காட்டேன்.

வ. ஆம் ஆம்! என் கண்ணுக்கு முன்பு புலப்படவில்லை! தாதா! இதுமாத்திரம் உங்கள் கண்ணுக்கு எப்படி தெரிந்தது தாதா?

சு. அது ஒவ்வொரு வேளையில் கொஞ்சம் தெரிகிறது, மற்ற வேளையிலெல்லாம் மழுங்கிப் போகிறது வள்ளி; இது உலக வழக்கம்.

வ. தாதா! உங்களைப் பார்த்தால் எனக்கென்னவோ கொஞ்சம் சந்தேகமா யிருக்கிறது தாதா!—அது போனால் போகட்டும். இந்த சுனை நீர் நன்று யிருக்கிறது. ஜாக்கிரதையாய் இறங்கிப் புசியும்.

சு. அப்படியே. [இறங்கி கால் தவறி விழுந்தது போல் பாசாங்கு செய்து.] வள்ளி! வள்ளி! கால் தவறி விழுந்துவிட்டேனே! விழுந்து விட்டேனே! என்னைக் கரையேற்று! கரையேற்று! இல்லா விட்டால் மடிந்து போவேன்!

வ. ஐஐயோ! நான் என்ன செய்வது! தாதா தண்ணீரில் மூழ்கிப் போகிறாரே! மூழ்கிப் போகிறாரே!—

[பரணருகில் ஓடி]

அண்ணா! குட்டியண்ணா! சின்னகுட்டியண்ணா! ஓடிவா! ஓடிவா! தாதா தண்ணீரில் விழுந்துவிட்டார்! விழுந்து விட்டார்!

பரணிலிருந்து கடைசி மைந்தன் மெல்ல வருகிறான்.

ஓடிவா அண்ணா! ஓடிவா! முழுகிப் போகிறார்!

க. மை. [சுனையில் பார்த்து] எப்படி விழுந்தது கிழம் இதில்?

[சாவகாசமாய்]

வ. அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன்! இப்பொழுது முதலில் இவரைக் கரையேற்று! கரையேற்று! உன்னை வேண்டிக் கொள்கிறேன்.

க. மை. ஏது! பிழைக்கிறது கஷ்டம்—நானு போயி நாலு ஆம்பளைங்களை இட்டுகினு வர்ரேன். [போகிறான்.]

சு. வள்ளி! வள்ளி!—

வ. ஐயோ! இந்த தர்ம சங்கடத்திற் கென் செய்வது?—தாதா! இதோ இந்தத் தடியைப் பிடித்துக் கொள்ளுங்கள்!

சு. ஐயோ! கழி ஜலத்தில் வழுக்குகிறதே!—வள்ளி! உன் கையைக் கொடுத்து கரையேற்றேன்!

வ. ஐயோ! நான் என்ன செய்வ திப்பொழுது? எப்படியாவது ஆபத்துகாலத்தில் ஒரு உயிரைக் காப்பாற்றவேண்டு மென்கிறார்களே!—தாதா! இதோ என் கையைப் பிடித்துக்

கொண்டு—கரையேறுங்கள்.

[கையைக் கொடுத்து கரையேற்றுகிருள்.]

தாதா! நீங்கள் என்ன வேண்டுமென்றே விழுந்தீர்களா நிஜமாக விழுந்தீர்களா?

சு. அது எப்படியாவதிருக்கட்டும் என்னைத் தீண்டலாகாது என்றாயே, இப்பொழுது என்னை என்னமாகத் தீண்டினாய்?

வ. ஆபத்திலிருந்து ஒரு உயிரைக் காப்பாற்ற அப்படிச் செய்தல் தவறல்லவென் றெண்ணி அங்ஙனம் செய்தேன்—ஆஹா! என்ன ஆச்சரியம்! தாதா! இதென்ன மாயமா யிருக்கிறது! தண்ணீரில் விழுந்து எழுந்தவர் ஆடை யொன்றும் நனையாம லிருக்கிறதே! இதென்ன மாயமா யிருக்கிறது! என்னை வஞ்சிக்க இவ்வாறு மாயம் செய்தீரா என்ன?

சு. எனக் கென்ன மாயம் தெரியும் வள்ளி!—அது போகட்டும். என் உயிரை இரண்டாம் முறை காப்பாற்றினாய்—

வ. போதும் போதும்! முன்பு கொடுத்ததுபோல் எனக்குக் கைம்மாறு வேண்டாம்.

சு. சீ! அப்படி செய்வேனா? முன்பைவிட இப்பொழுது பெரும் ஆபத்தி •னின்றும் காப்பாற்றினாயே, அதற்கு பெரும் கைம்மாறு செய்யவேண்டாமா?

[அவளுடைய அதரத்தில் முத்தமிடப் போகிறார்.]

வ. [திடுக்கிட்டு] ஐயா! பெரியவரே சற்று தூர நில்லும்! உமக்கு என்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா என்ன?

சு. ஆம் வள்ளி! உன்னை மனைவியாக அடையவேண்டு மென்னும் பயித்தியம் பிடித்திருக்கிறது. அதனால்தான் இப்படி அலைகிறேன். நீ எப்படியாவது என் தாக விடாயைத்தீர்த்ததுபோல்—என் மோஹ விடாயையும் தீர்க்க வேண்டும். இல்லாவிடின் என் உயிர் நில்லாது—

வ. ஆஹா! அப்படியா சமாசாரம்! எனக்கு முன்பே கொஞ்சம் சந்தேகம் தட்டியது!—பெரியவ ரென்று பார்த்து இதுவரையில் பொறுத்திருந்தேன்! இதோ என் அண்ணன்மார்

களையெல்லாம் அழைத்து உம்மை என்ன செய்கிறேன் பாரும்! அண்ணு! குட்டியண்ணு! சின்னகுட்டியண்ணு! எல்லோரும் ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!

கடைசி மைந்தன் வருகிருன்.

க. மை. என்னு தங்கிச்சி! பூட்டுதா கெழம்?

வ. போய்விட்டதா! கண்டம் தப்பிப் பிழைத்ததுபோய், தன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி கேட்கிறது பார்த்தாயா?

க. மை. உன்னையா கேட்டுது அப்படி?—இதோ கொஞ்சம் இரு! —எங்கெ என் தடி—ஓரே அடியில் எழு?

வ. அதோ அந்த சுனையருகில் கிடக்கிறது.

க. மை. கொஞ்சம் இரு! இதோ போய் அதை எடுத்துகினு வர்ரேன், அதுவரையில் விடாதே இந்த கெழத்தெ. அப்படியா சமாசாரம்! [சுனைக்குப் போகிருன்.]

சு. வள்ளி! இவ்வளவுதானு உன் புத்தி! நீ என்னவோ புத்தி சாலி யென்று பார்த்தேன். உண்மையில் இந்தக் கிழமா உன்னைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறதென நினைத்தாய்?

வ. பிறகு ஏன் அப்படி கேட்டீர்?

சு. அப்படிக் கேட்டால் நீ என்ன பதில் சொல்லுகிருயென்று பரிசோதித்துப் பார்த்தேன். இந்த கிழத்துக்காவது கலியாணமாவது! காடு போபோ என்கிறது, வீடு வா வா என்கிறது. இந்த வயதில் கல்யாண மொன்ரு! அன்றியும் நீ தான் வேருெரு புருஷன்மீது காதல்கொண்டிருக்கிருயே.

வ. தாதா!—அதெப்படி தெரியும் உங்களுக்கு?

சு. எனக்குக் கொஞ்சம் ஜோஸ்யம் தெரியும்—அதனுல் பார்த்து அறிந்தேன்.

கழியைக் எடுத்துக்கொண்டு கடைசி மைந்தன் வருகிருன்.

க. மை. இதோ வந்துட்டேன்!—“ஓரே அடியில் எழுடன்” இப்பொ இந்த கெழம் என்ன சொல்லுது கேளு!

சு. அப்பா, நான் வேறொன்றும் சொல்லவில்லை இந்தக் கிழமா உன் தங்கையை மணக்கப் போகிறது? உன் தங்கையை மணக்க, என்றும் மாறாத எழிலும் இளமையும் உடைய ஒருவன் பிறந்திருக்கிறான் என்று சொல்கிறேன்.

வ. தாதா, அது யார் என்று ஜோஸ்யம் பார்த்துச் சொல்லி விடும், உம்மை மன்னித்து விடுகிறேன்.

க. மை. ஏ! இந்த கெழத்துக்கென்ன ஜோஸ்யம் தெரியுமா என்ன?

வ. தனக்கு ஏதோ தெரியும் என்று சொல்லுகிறார்.

க. மை. ஆனா எனக்கு ஜோஸ்யம் பாத்து சொல்லுங்க. அதும் பேர்லெ ஒங்களுக்கு நிஜமா ஜோஸ்யம் தெரியுமா இல்லையா இண்ணு சொல்ரேன்—

சு. ஏதோ—உன் கையைக் காட்டு.

க. மை. இதோ—எனக்கு எத்தனெ புள்ளேங்க பொறந்திருக்குது பாத்து சொல்லுங்க.

சு. உனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையே.

க. மை. அப்படி எய்தி யிருக்குதோ கையிலே—இதெல்லாம் ஒத வாது—இதெல்லாம் யாரையாவது கேட்டு தெரிஞ்சிகினு இருப்பைங்க—யாருக்கும் தெரியாத சமாசாரமா சொல்ல ணும்— ஒரு ஜோஸ்யம்.

சு. சொல்லுகிறேன்—அப்பா—அந்த தடியைக் காட்டு.

க. மை. இத்தெயா சொல்லப் போரைங்க?—ஆனா, எனக்கு மாத்தி ரம் ரகஸ்யமா சொல்லுங்க—தங்கிச்சி, நீ கொஞ்சம் அப்புற மாயிரு.

சு. இதில் ஒரு அடியில் ஏழு என்று எழுதி யிருப்பது—

க. மை. மொள்ள மொள்ள!

சு. [அவன் காதில் ஏதோ சொல்லி] ஜோஸ்யம் சரிதானா?

க. மை. சாமி! சாமி! நீங்க ரொம்ப பெரியவரு! உங்களுக்கு ஜோஸ் யம் நண்ணா தெரியும் ஒப்புக்கரே! இத்தெ மாத்ரம் யாருக் கும் வெளியிலெ சொல்லாதைங்க—சொன்னாக்கா ஒங்க ளோடெ அப்புறம் பேசவேமாட்டேன்!—

வ. [அருகில் வந்து] எனக்குக் கூடவா சொல்லக்கூடாது?

க. மை. ஓனக்குகூட சொல்லக்கூடாது. பெரிய ரவுஸ்யம்! தங்கிச்சி! பெரியவருக்கு ஜோஸ்யம் நண்ணுதெரியும், நீ கேட்டுப்பாரு.

வ. அப்படியே ஆகட்டும் — ஆனால் அண்ணு, நீ மாத்திரம் உன் ஜோஸ்யத்தை நான் கேட்கக்கூடா தென்றாயே, என் ஜோஸ்யத்தை மாத்திரம் நீ கேட்கலாமா? நீ கொஞ்சம் அப்புறமாயிரு.— [கடைசி மைந்தன் ஒரு புறமாகப்போகிருன்.] ஸ்வாமி, நான் யாரை மணம்புரிய விரும்புகிறேன் அதைச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

சு. உனது இடது கரத்தைக்கொடு. [கையைப் பார்த்து] ஆஹா! வள்ளி, உனது சாமர்த்தியம் இப்பொழுது தெரிகிறது! எல்லோரையும் விட்டு உன் குல தெய்வமாகிய முருகக் கடவுள் மீதே காதல்கொண் டிருக்கிருயே — உண்மைதானு? என் ஜோஸ்யம் சரிதானு?

வ. [தலை குனிந்து] ஆம், உண்மைதான் ஸ்வாமி.

சு. [மறுபடியும் கையினைப் பார்த்து] ஒரு நாள் உன் கனவில் அவர் தோன்றினது முதல் அவரையே மணம் புரிவதாகத் தீர்மானித்திருக்கிருய்.—உண்மைதானு?

வ. ஆம் ஸ்வாமி!— ஸ்வாமி, தாங்கள் எல்லா முணர்ந்த முதியவரா யிருக்கிறீர்.—ஸ்வாமி,—தயவுசெய்து,—இதை மாத்திரம் எனக்குச் சரியாகப் பார்த்து சொல்லி விடுங்கள்.-இந்த ஜன்மத்தில் நான் அவரை என் கணவனுகப் பெறுவேனு?

சு. வள்ளி—பெண்ணே—வருந்துதலொழி—உன் மனோபீஷ்டம் சீக்கிரம் நிறைவேறும்.

வ. ஸ்வாமி, என் நாதன் என்னை சீக்கிரம் பாணிக்கிரஹணம் செய்து கொள்வாரா உண்மையில்?

சு. பெண்ணே! உனக்கு சந்தேகம் வேண்டாம். — என் வார்த்தை ஒரு போதும் பொய்க்காது—உன் நாதன் உன்னைப் பாணிக்கிரஹணம் செய்துகொண்டான் என்றே நம்பு

வ. ஸ்வாமி! அப்படியே நினைக்கிறேன். — எல்லாம் தங்களுடைய அனுக்கிரஹம்—

சு. ஆனால் ஒன்று—வள்ளி, நீ என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்வதாகச் சொல், அவர் உன்னை சீக்கிரம் கலியாணம் பண்ணிக் கொள்வார்.

வ. போங்கள்! ஸ்வாமி! விளையாடுகிறீர்கள்! இது உங்களுக்கு நியாயமா? என் மனதை நன்றாயறிந்தபிறகு தாங்கள் இப்படி என்னை ஏளனம் செய்யலாமா? ஸ்வாமி, உங்களை ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன். இனி இம்மாதிரியாக என்னை ஏளனம் செய்யாதீர்கள்.—சின்னகுட்டி பண்ணா, வா—ஸ்வாமி, வாருங்கள். இருட்டும் சமயமாயிற்று, இனி பரணுக்குப் போவோம்.

க. மை. ஆமாமாம்! இருட்டப் போறது, அப்புறம் ஏதாவது துஷ்ட மிருகங்க வந்தா—

சு. என்ன? இங்கே ஏதாவது துஷ்ட மிருகங்களுண்டா என்ன?

க. மை. இந்தக் காட்டிலெ ஒண்ணு பாக்கி கெடயாது. இருட்டிப் போனா அல்லாம் வரும்—கோனாய், புலி, சிங்கம், கரடி, யானெ—

வ. அண்ணா! அண்ணா! அந்த பெயரை மாத்திரம் சொல்லாதே! எனக்கு பயமா யிருக்கிறது!

சு. அதென்ன அது மாத்திரம் அவ்வளவு பயம்?

க. மை. வேறொண்ணுமில்லெ, கொஞ்ச நாளெக்கி மின்னெ, தங்கிச்சியெ ஒரு காட்டானெ தொரத்திச்சி, அது முதல் யானெ இண்ற பேரெ கேட்டா நடுக்கம்! அவ்வளவு தான்.

வ. மறுபடியும் பார் அண்ணா!

சு. அப்படியா?—அப்பா, உனக்கு ஒரு மிருகத்திடத்தும் பயமில்லையா?

க. மை. இத்தெ பாத்தைங்களா கையிலெ—ஒரே அடியிலெ ஏழு!

சு. காட்டு பன்றி வந்தால்?

க. மை. ஓரே அடியில் எழு!

சு. கரடி வந்தால்?

க. மை. ஓரே அடியில் எழு!

சு. புலி வந்தால்?

க. மை. ஓரே அடியில் எழு!

சு. சிங்கம் வந்தால்?

க. மை. ஓரே அடியில்—

சு. யானை வந்தால்?

க. மை. ஓரே—

வ. ஐயோ! சாமி அதன் பெயரை எடுக்கவேண்டாமென்றேனே. எனக்கு பயமாயிருக்கிறது—நான் பரணுக்குப் போகிறேன். [போகிறாள்.]

சு. மலைப்பாம்பு வந்தால்?

க. மை. ஓரே அடியில்—

சு. ஈ வந்தால்?

க. மை. ஓரே அடியில் எழு!—ஏஎ!—அத்தெ சொல்லத் தேவலெ இண்ணு சொல்லலெ நானு—இனிமேலெ தாதா பேச்சிக்கி வர்ராரு பாரு! நாம் போரேன். [போகிறான்.]

சு. ஆஹா! இப்பொழுது தெரிகிறது, என் எண்ணம் ஈடேறுவதற்கு இத்தனை இடையூறுகள் சம்பவிப்பதற்குக் காரணம்! வள்ளியை மணம்புரிய எண்ணி நான் கைலையைவிட்டுப் புறப்படும்பொழுது, எங்கே போகிறாய் என்று அண்ணா கேட்டதற்கு, உண்மையைக் கூறி அவர் விடைபெற வெட்கி, விரைந்து வந்துவிட்டேன். அதன் பலன் இது— அண்ணா! இந்த அபராதத்தை மன்னித்து தாம்தான் இந்த சமயத்தில் எனக்குதவவேண்டும். தாம் யானை உருவில் வள்ளியின் முன்தோன்றி அவளை எனக் கிணங்கச் செய்யவேண்டும். இல்லாவிடின் நான் நாரதருக்குக் கூறிய மொழி மெய்யாகாது. [பிரார்த்திக்கிறார்.]

வ. [உள்ளிருந்து] அண்ணா! அண்ணா! ஓடிவா! ஓடிவா! யானை! யானை!

வள்ளி பயந்து ஓடி வருகிறாள்.
கணநாதர் யானை ரூபத்துடன் பின் வருகிறார்.

ஸ்வாமி! ஸ்வாமி! அபயம்! அபயம்! தாம் எல்லாம் வல்லவராய்த் தோற்றுகிறீர்! இச் சமயம் இந்த யானையைத் துரத்தி அடியாளைக் காத்து ரட்சியும்! ரட்சியும்!

சு. எங்கே யானை? எங்கே யானை?

வ. அதோ வருகிறது ஸ்வாமி! சீக்கிரம்! சீக்கிரம்!

சு. அந்த யானையைத் துரத்திவிட்டால் எனக்கென்ன தருகிறாய்?

வ. உமக் கென்ன வேண்டுமென்றாலும் தருகிறேன். சீக்கிரம்! சீக்கிரம்!

சு. ஆனால் கலியாணம் பண்ணிக்கொள்வதாகச் சொல்.

வ. நான் அப்படி சொல்லவே மாட்டேன்.

சு. ஆனால் நான் யானையைத் துரத்தமாட்டேன்.

வ. ஸ்வாமி! ஸ்வாமி! என் உள மறிந்தும் தாம் என்னை இப்படி ஹிம்சிக்கலாமா?—என்னை வஞ்சிக்கலாமா?—உமக்குக் கோடி நமஸ்காரம்; இந்த யானையைத் துரத்தி விடும்! துரத்தி விடும்!

சு. ஆனால் கலியாணம் பண்ணிக்கொள்வதாகச் சொல்.

வ. அப்படியே — கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறேன் — துரத்திவிடும்! துரத்திவிடும்!

சு. ஆனால் என் பின்னால் வந்து கண்ணை மூடிக்கொள்.

[வள்ளி அப்படியே செய்கிறாள்.]

[ஒரு புறமாக] அண்ணா, தங்களுக்கு சிரமம் கொடுத்தேன் மன்னிக்கவேண்டும்—

[கைகூப்பி வணங்குகிறார்; யானை மறைகிறது.]

வள்ளி, கண் திறந்து பார், யானை போய்விட்டது.

வ. [பயந் தெளிந்து] அப்பா! போய்விட்டதா! — ஸ்வாமி உம்முடைய பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம் — உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

சு. அஹா! இதற்குள் மறந்து விட்டனையா? சற்றுமுன் கூறியதை மறந்தாயா என்ன?

வ. நான் பயத்தில் என்ன கூறினேன் என்பது சரியாக ஞாபகமில்லை. நான் என்ன சொன்னேன் ஸ்வாமி?

சு. என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறேன் என்றாயே?

வ. ஸ்வாமி, உண்மையாகச்சொல்லும், உம்மைக் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறேன் என்று கூறினேனா? கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறேன், என்று கூறினேன். இப்பொழுதும் அதுதான் சொல்லுகிறேன். நான் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறேன்—என் காதலராகிய முருகக் கடவுளை!

சு. வள்ளி! இப்படியா என்னை வஞ்சித்தாய்?

வ. நீர் மாத்திரம் என்னை வஞ்சிக்கலாமோ ஸ்வாமி?

சு. சரி நீதான் ஜெயித்தாய்! இந்த கிழத்தை ஏமாற்றி விட்டாய்!

வ. ஸ்வாமி, என்மீது கோபம் வேண்டாம்—வாரும் பரணக்குப் போவோம். [புறப்படுகிறாள்.]

சு. அண்ணா! அண்ணா!— [கையினைப் கூப்புகிறார்.]

கணநாதர் மறுபடியும் யானை உருவுடன் வள்ளியின் எதிர் தோற்றுகிறார்.

வ. ஐஐயோ! ஸ்வாமி! மறுபடியும் யானை வந்துவிட்டதே! வந்துவிட்டதே! [பயந்து சுப்பிரமணியர் பின்புறமாக ஓடுகிறாள்.]

சு. ஆமாமாம்! நீ கிழவனை ஏமாற்றினால் யானை உன்னை ஏமாற்றுகிறது!

வ. ஸ்வாமி! ஸ்வாமி! கொஞ்சம் கிருபை கூரும்! இதெல்லாம் தாம் செய்யும் ஏதோ வஞ்சகம் எனத் தோற்றுகிறது. பேதையாகிய என்னை வஞ்சிக்காதீர்! உம்முடைய பாதத்தைப் பற்றி வேண்டுகிறேன்! உம்மைக் கலியாணம் பண்ணிக் கொள்வது தவிர வேறெதையாவது சொல்லும்! கேட்கிறேன்!—ஸ்வாமி! ஸ்வாமி!

சு. அதெல்லாம் உதவாது. அதுதான் எனக்கு வேண்டும்.

வ. ஐயோ! யானை அருகில் வந்துவிட்டதே!—ஸ்வாமி! என்னை என்ன சொல்லச் சொல்கிறீர்?

சு. அதெல்லாம் எனக்குத் தெரியும். முன்பு ஏமாற்றியது போல் என்னை இப்பொழுது ஏமாற்ற முடியாது. உன்குல தெய்வத்தின்மீ தாணைப்படி என்னை மணம்புரிவதாகச் சத்தியம் செய்துகொடு.

வ. [யானை துரத்த இங்கும் அங்கும் ஓடி] முருகா!—முருகா!—முருகா!—இந்த சமயம் அடியாளைக் காத்தருளும்!—

[சுப்பிரமணியர் அருகிற் சென்று கண்மூடி]

முருகா! உம்மீ தாணை! உம்மையே மணம் புரிகிறேன்! இது சத்தியம்! [கையடித்துக் கொடுக்கிருள்.]

சு. [கைக்கு முத்தமிட்டு] வள்ளி! இனி உன் வருத்தமெல்லாம் ஒழிந்தது. [ஒருபுறமாக யானை அருகிற் சென்று நமஸ்கரித்து] அண்ணா! உம்முடைய பேருபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!

[கணநாதர் துதிக்கையால் சுப்பிரமண்யரை உச்சி முகர்ந்து ஆசீர்வதித்து மறைகிருர்.]

சு. வள்ளி! கண்ணைத்திற! [மறைகிருர்.]

வ. [மெல்ல கண் திறந்து] ஹா! எங்கே வயோதிகர்?—எங்கே யானை? இதென்ன மாயம்!—ஆ! அது யாருடைய குரல்! அந்த வயோதிகர் குரலல்லவே! கம்பீரமாயும் இனிமையாயும் இருந்ததே!—அதைக் கேட்ட மாத்திரத்தில் என் செவி ஏன் இன்பமடைந்தது?—பிராணநாதா! ஒருபுறம் இதெல்லாம் உம்முடைய திருவிளையாட்டென்றே தோற்றுகிறது! மற்றொருபுறம், அப்படியில்லாவிட்டால் என் கதி என்னவாவது என்று தோற்றுகிறது! கருணைக் கடவுளே! உமது காதலியை இவ்வாறு சந்தேகத்திற் குட்படுத்தி கலக்கலாமா? இனியாவது கருணை புரியும்! கருணை புரியும்!—

சு. [பின்புறமாகத் தன் சுய ரூபத்துடன் தோன்றி] கண்மணி! உன் கழிபெருங் காதலைக் கண்டறிந்து உளம் பூரித்தேன்—திரும்பிப் பார்!

வ. ஹா! நாதா! நாதா!—இது கனவல்லவே? கனவல்லவே?

சு. இல்லை கண்மணி! இனி உன் கவலை யெல்லாம் ஒழிவா யாக!—வேடுவனாக அன்று வந்து உன் மனதைக் கலக்கின வனும், சற்று முன்பாக வயோதிகனாக வந்து உன்னைக் கஷ்டத்திற் குள்ளாக்கினவனும் நானே!

வ. [அவர் பாதத்தில் வீழ்ந்து] நாதா! நாதா! நான் என்ன வென்று உமது மன்னிப்பைக் கேட்பேன்? பேதையாகிய நான் உமது பெருமை அறியாது அக் கோலங்களில் நீர் வந்த பொழுது, ஏதோ தூஷணமாக மொழிந்திருப்பேன். அவைகளை யெல்லாம் தாம் தம்முடைய பேரன்பால் மன்னித் தருளவேண்டும்.

சு. [வாரி எடுத்து மார்புடன் அணைத்து] கண்மணி! இவைகளை யெல்லாம் நான் பூஷணமாகக் கொண்டேன். நீ அச்சமயங் களில் கூறிய மொழிகளெல்லாம் உனக்கு என் மீது உண்மை யில் உள்ள கழிபெருங் காதலைக் காட்டின வல்லவோ? ஆகவே அவைகளுக்காக நான் மிகுந்த சந்தோஷமல்லவோ படவேண்டும்? அப்படி சந்தோஷப்பட வேண்டுமென்றே அவ்வேடங்களைத் தரித்தேனன்றோ?

வ. ஆனால்—நாதா—என்மீது உமக்குக் கொஞ்சமேனும் கோப மில்லையே?

சு. கொஞ்சமேனும் கோபமில்லை கண்மணி?

வ. ஆனால் என்னை மன்னித்தது உண்மைதானே?

சு. சத்தியம்—இன்னும் உனக்கேன் சந்தேகம்?

வ. நாதா, இவ்வாறு கூறுவதற்காக அடியாளை மன்னிக்க வேண் டும். எனக்கு இன்னும் கொஞ்சம் சந்தேகமாயிருக்கிறது. அதை நிவர்த்திக்கும் மார்க்கம் தாம்தான் அறியவேண்டும்.

சு. [முத்தமிட்டு] இப்பொழுது சந்தேகம் எல்லாம் போய்விட் டதா?

வ. போய்விட்டது பிராணநாதா!—ஆனால்—ஆனால்—

சு. என்ன கண்மணி ?—என்னை ஏதோ கேட்க விரும்புகிறாய் —தாராளமாய்க் கேள்.

வ. எனக்கு வெட்கமா யிருக்கிறது—நாதா!

சு. என்னைக் கேட்பதற்கு வெட்கமென்ன ? சங்கோசமின்றிக் கேள்.

சு. ஆனால்—பிராணநாதா, என்னை இப்படியே உம்முடன் அழைத்துச் செல்லும் இட்சணமே! பிராணநாதா, உம்முடைய தேஜோ ரூபமான திவ்ய தர்சனம் கிடைத்து, உமது வாயால் காதலி என்றழைக்கப்பெற்று, உம்முடைய அதராமிர்தத்தைப் பருகியபின் உம்மைவிட்டு அரைக் கணமும் இனி பிரிந்திருக்க என்னால் முடியாது.

சு. கண்மணி, நான் சொல்வதைக் கேள். உன்னை அழைத்துச் செல்ல இது சமயம் அன்று நீ உன் தந்தையின் வீட்டிற்குப் போய் வாழ்ந்திரு. கூடிய சீக்கிரத்தில் நான் வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்.

வ. பிராணநாதா, உம்முடைய உத்தரவுபடியே, ஆயினும் தாமதம் செய்யாதீர், கூடிய சீக்கிரத்தில் என்னை அழைத்துச் செல்லவேண்டும்; இல்லாவிடின் நான் ஆவி தரியேன்.

சு. அப்படியே கண்மணி! [மறைகிறார்]

காட்சி முடிகிறது.

## எட்டாம் காட்சி

இடம்—கழுகுமலைக்குப் போகும் வழி.

வாத்யகோஷம் முன் செல்ல, ஒரு வேடன் தினைக்காவடி எடுத்துக்கொண்டு ஆடிக்கொண்டு வருகிறான். நம்பிராஜனும், அவன் ஏழு மைந்தர்களும், வருகிறார்கள். வேடர்கள் புடை சூழ்ந்து "அரோஹரா! வேலும் மயிலும் துணை," என்று கூவிக்கொண்டு வருகின்றனர்.

ந. என்னடா காவடி நிற்கிறது ? சீக்கிரம் போகவேண்டும் —நாழியாய்விட்டது.

மூ. மை. அண்ணா! கொஞ்சம் பொறுங்கள். ஆவேசம் வருகிறாற் போலிருக்கிறது.

நா. அப்படியா!—எதோ? எதோ?— [அருகிற் செல்கிறான்.]

காவடிக்காரன். ஆ! ஆ! ஆ!— [ஆவேசம் வருகிறது.]

நா முருகவேளே! முருகவேளே!—நாங்கள் ஏதாவது குறை செய்திருந்தால் மன்னிக்கவேண்டும்! மன்னிக்கவேண்டும்!

கா. அடே! — ஏனடா இந்தத் தினைக்காவடியை முன்பே செலுத்தவில்லை!

நா. எங்கள் பேரில் தவறுதான்! தவறுதான்! பொறுத்தருள வேண்டும். இப்பொழுதுதான் தினை விளைந்தது! மன்னிக்கவேண்டும்.

கா. அந்த அபராதத்திற்காக—உங்களுக்கு பிராயச் சித்தம்—நடக்கப் போகிறது.

நா. என்ன? என்ன ஸ்வாமி?

கா. நள்ளிருளில் கள்ளத் தனமாய் வள்ளியை மெள்ளக்கொண்டு போகப் போகிறான்—ஒருவன்!

நா. ஆ! ஆ! அப்படியா?—எப்பொழுது ஸ்வாமி?

கா. இன்றிரவே! இன்றிரவே! இன்றிரவே! ஆயினும் அஞ்சாதீர்கள் அதனால் உங்களுக்கு சுகிர்த முண்டு.

நா. [கைகூப்பி வணங்கி] ஸ்வாமி! தாங்கள் இதை எப்படியாவது தடுக்கக்கூடாதா? உங்களை மிகவும் பிரார்த்திக்கிறோம்.

கா. ஆ! ஆ! ஆ!—

மு.மை. அண்ணா! முருகக் கடவுள் மலையேறுகிறாற்போலிருக்கிறது.

நா. ஆம்! ஆம்! கற்பூரம் கொண்டு வாருங்கள்.

[தீபாராதனை செய்கிறார்கள். ஆவேசம் நீங்குகிறது.]

அந்தோ! ஸ்வாமி சொன்னதைக் கேட்டீர்களா? இதற்கு நாம் என்ன செய்வது? இன்றிரவே அப்படி நடக்கும் என்று கூறியிருக்கிறாரே!

க. மை. அண்ணா! இதுக் கெல்லாம் பயப்படாதே தங்கண்ணா! "ஒரே அடியில் ஏழு" எங் கையிலெ இருக்கும்போது எவனாவது கிட்ட நெருங்குவானா?

மூ.மை. போடா! நீ ரொம்ப தைர்யசாலி!

ந. மைந்தர்காள், வாருங்கள் முன்பு காவடியைக் கொண்டு போய் கோயிலில் செலுத்திவிடுவோம். — பிறகு இதற்கு ஏதாவது தக்க ஏற்பாடு செய்யவேண்டும் — வாருங்கள் சீக்கிரம். [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## ஒன்பதாம் காட்சி

இடம்—நம்பிராஜன் அரண்மனையில் சயனக்கிரஹம்.
வள்ளி சயனத்தின்மீது உட்கார்ந்திருக்க,
அருகில் நின்று தோழி சைத்யோபசாரம் செய்கிறாள்

வ. அடி தோழி, இந்த சைத்யோபசாரத்தினால் என்னை வாட்டும் வெப்பம் தீருமோ?—என் நாதனாகிய வேலாயுதன் வந்தா லொழிய இந்த வெப்பம் தீராதே!

தோ. அவர்தான் இன்றிரவு வந்து உம்மைக் கொண்டுபோவதாகக் கூறி யிருக்கிறாரே.

வ. உன்னிடம் சொன்னாரோ அப்படி?

தோ. என்னிடம் நேராகச் சொல்லாவிட்டாலும், இன்றைத்தினம் தினைக்காவடி யெடுத்தபொழுது ஆவேசத்தில் கூறியதற்கு அதுதான் அர்த்தம் என்பதற்கு சந்தேகமே யில்லை.

வ. எனக்கும் அப்படித்தான் தோற்றுகிறது.—ஆயினும்—பிதா முதலியோரெல்லாம் உண்மையை யறியாது அதைத் தடுக்க வேண்டுமென்று வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்வதாகக் கூறினாயே.

தோ. ஆம், செய்கிறார்கள்—வாஸ்தவம்தான்—ஆயினும் தெய்வ யத்தனத்தின்முன் இவர்கள் யத்தனம் எல்லாம் எவ்வளவு அம்மா!

வ. ஆயினும் எனக்கு மாத்திரம் மனதில் ஏதோ பயமா யிருக்கிறது—என்ன நேரிடுமோ என்று.

தோ. இவ்வளவு கஷ்டமேன்? உண்மையைப் பிதாவிடம் கூறி விடுமே?

வ. என் உயிர்த் தோழி! உன்னிடம் கூறுவதற்கே எனக்கு எவ்வளவு லஜ்ஜையா யிருந்தது! அப்படிக் கிருக்க அவரிடம் வாயைத் திறந்து இவ் விஷயத்தைப் பற்றி பேச என் மனம் எழவில்லையே!—

தோ. அம்மணி, ஒன்றும் அஞ்சாதீர்கள். நீங்கள் படுத்துறங்கும் அவரை தியானித்து. எல்லாம் உம திச்சைப்படியே முடியும்.

வ. ஆம், அப்படியே செய்கிறேன்.— நீயும் ஒரு புறமாய்ப்படுத் துறங்கு. [தோழி படுத்துக் கொள்கிருள்.]
பிராணநாதா! இன்றிரவு என்னை எப்படியாவது ஆட்கொள்ள வேண்டும். இனி இவ் வுலகில் அரை க்ஷணமும் இருக்கப் பொறுக்கமாட்டேன்! தேஜோமயமான உமது திவ்ய ரூபத்தை கண்ணார தர்சித்து, தேனினுமினிய உமது தெள்ளிய குரலைக் காதாரக் கேட்டு, தேவாமிர்தத்தினும் மேலான உமது அதர பானத்தை அருந்தியபின், அடியாள் உம்மை அரைக் கணமும் பிரிந்திருக்க மனம் ஒப்புமோ? சரவண பவனே! உமது சரணமே சரணம்! அடியாள்மீது அருள் சுரந்து, இன்றிரவே என்னை ஆட்கொண்டு, உம்முடன் அழைத்துச் செல்லவேண்டும்.

[துதித்துவிட்டுப் படுத்துறங்குகிருள்.]

நம்பிராஜனும், ஏழு மைந்தர்களும் வருகிருர்கள்.

ந. வள்ளி?—ஓ! உறங்குகிருற்போ லிருக்கிறது தோழியுடன். எழுப்பாதீர்கள்—மைந்தர்காள், நீங்கள் இந்த அறையிலே படுத்து ஜாக்கிரதையாகக் காருங்கள்.—நான் வெளியில் வேடர்களுடன் சுற்றிக் காத்து வருகிறேன் உறங்காது.— எப்படி அந்தக் கள்ளன் வருகிருனென பார்ப்போம்.

க. மை. இவ்வளவு கஷ்டம் எல்லாம் என்னாத்துக் கண்ணு? வர்ரவென் இந்த வழியாத்தானே வரணும். இந்த வாசல் படிக்கு குறக்கா நானு படுத்துகரெ—எவனுவது உள்ளே

வர காலெ வெச்சாணு—ஓரே அடியில் ஏழு! அவ்வளவு தான்!

மூ.மை. அவன் கிடக்கிறான் அண்ணு—நாங்கள் எல்லோரும் பார்த்துக்கொள்ளுகிறோம்—உள்ளிருந்து. நீங்கள் வெளியில் ஜாக்கிரதையாயிருங்கள். [நம்பிராஜன் போகிறான்.]
தம்பிமார்களே, நாம் வள்ளியின் படுக்கையைச் சுற்றிப் படுத்துக் கொள்வோம். ஒருவேளை நாம் தூங்கிவிட்டாலும், வருகிறவன் நம்மைத் தாண்டித்தானே போகவேண்டும், அப்பொழுது விழித்துக்கொள்வோம்.

க. மை. ஆணு, நீங்கல்லாம் தூங்கரத்துக்காக ஏற்பாடு பண்ரைங்க? தூங்குங்க! தூங்குங்க!—நான் தூங்கப்போரதெ யில்லெ.—இந்த வாசப்படியண்டெ படுத்துக்கரேன்.

மூ.மை. படுத்துக்கொள்! படுத்துக்கொள்! தூங்காத முகத்தைப் பிறகு பார்க்கலாம்.

[எல்லோரும் சுற்றிப் படுத்துக் கொள்கின்றனர்.]

வாட்களைப் பக்கத்திலேயே வைத்து படுத்துக் கொள்ளுங்கள்.

க. மை. மூத்தண்ணு—தூக்கம் வராத இருக்கரத்துக்கு ஒரு யுக்தி சொல்லட்டுமா?

மூ.மை. சொல் பார்க்கலாம்.

க. மை. நீங்கல்லா ஒவ்வொர்த்தரா ஒரு கதெ சொல்லிக்கினு வாங்க, நானு கேட்டுகினு வர்ரேன். அப்பொ யாருக்கும் தூக்கம் வராது.

மூ.மை. நான் ஒரு கதை சொல்லவா?—ஒரு ஊரிலெ நிரம்ப தைர்யசாலியான வேடன் ஒருவன் இருந்தானும்—ஒரு நாள் காட்டிலே—ஒரு தடியாலெ ஏழு நாய்களை அடித்துத் துரத்தினும்.—அது முதல்—அந்த தடியில் "ஓரே அடியில் ஏழு" என்று வீரமாக எழுதிவைத்துக்கொண்டானும்!

[மற்றெல்லோரும் நகைக்கிறார்கள்.]

இ.மை. இல்லை அண்ணா, அந்த கதை தப்பு—அவன் துரத்தினது —ஏழு பூனை!

மூ.மை. இல்லை—ஏழு அணில்!

நா.மை. நான்தான் பார்த்தேனே—ஏழு எலி!—

ஐ. மை. நீ தவறாக பார்த்திருப்பாய்—ஏழு குருவி!

ஆ.மை. போ அண்ணா, உன் கண்ணுக்கு நன்றாய்த் தெரியவில்லை போலும்—ஏழு வண்டு!

மூ.மை. சீ இப்படி நாம் சண்டை போடுவதில் பிரயோஜன மில்லை. அடே தம்பி, நிஜத்தைச் சொல்லிவிடு! நாங்கள் சொன்னதில் எது சரி?—என்ன பேசாமலிருக்கிறான்? தூங்கிவிட்டானா என்ன?—பார்த்தாயா! அப்பொழுதே நினைத்தேன். இவன்தான் தூங்காது ஜாக்கிரதையாயிருக்கப் போகிறவன்! —அடடா! என்ன இது!—தம்பிமார்களே! எனக்கேதோ மயக்கம் வருகிறாற் போலிருக்கிறது.

மற்றவர். ஆமாம் அண்ணா, எனக்கும் கூட —

[எல்லோரும் மயக்கமாகிப் படுத்து விடுகிறார்கள். இருள் சூழ்கிறது. ஒருபுறம் ஜோதி தோன்ற, அதன் மத்தியினின்றும் சுப்பிரமணியர் சுய ரூபத்துடன் தோன்றி, வள்ளியிடம் செல்கிறார்.]

சு. கண்ணே! கண்விழி!

வ. [திடுக்கிட்டெழுந்து] நாதா!—இத்தனை காவலையும் எப்படி கடந்து வந்தீர்?

சு. இதோ இவர்கள் காவல் செய்யும் அழகைப் பார்!

[நகைக்கிறார்.]

வ. மெல்ல! மெல்ல! நாதா! இவர்கள் விழித்துக்கொள்ளப் போகிறார்கள்!

சு. நாம் கடந்து போமளவும் விழிக்கமாட்டார்கள், என்மாய் கையினால் கட்டுண்டிருக்கின்றனர், வா போவோம்.

வ. நாதா, உமது இச்சைப்படி.

சு. ஒரு வேடிக்கை செய்வோம்!—வீரபாஹு!

[வீரபாஹுதேவர் தோற்றுகிறார். அவர் காதில் சுப்பிரமணியர் ஏதோ கூறிவிட்டு, வள்ளியை அழைத்துக் கொண்டு போகிறார். வீரபாஹுதேவர் அனைவர்களுடைய கத்திகளையும் உறைகளிலிருந்து எடுத்துக் கொண்டு, கடைசி மைந்தன் தடியில் ஈ என்ற எழுத்தை எழுதி அதில் ஒரு கயிற்றைக் கட்டி அதன் ஒரு முனையை கடைசி மைந்தன் தலை மயிரில் கட்டி விட்டு, தடியை ஒருபுறம் மூலையில் ஒளித்து வைத்து விட்டுப் போகிறார்.]

உள்ளே பேரொலி. நம்பிராஜனே! கண்விழி! கண்விழி!

[வெளியில் ஒரு பெரும் ஆரவாரம் உண்டாகிறது.]

நம்பிராஜன் வேகமாய் வருகிறான்.

ந. என்ன ஆச்சரியம்! வள்ளி! வள்ளி!—நினைத்தேன்! வள்ளி போய்விட்டாள்! இவர்களும் மயக்கமாய்க் கிடக்கிறார்கள். —மைந்தர்காள்! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!

[தட்டி எழுப்ப, எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்.]

வள்ளியைக் கள்ளன் கொண்டு போய்விட்டான்! வள்ளியைக் கள்ளன் கொண்டு போய்விட்டான்!

அனைவரும். அப்படியா! அப்படியா!

[பரபரப்புடன் எழுந்திருக்கின்றனர்.]

எங்கே அவன்? எங்கே அவன்?

[வாட்களை எடுக்க வெறும் உறைகள் மாத்திரம் கைக்கு அகப்படுகின்றன.]

மு.மை. அண்ணா! எங்கே என் வாள்?

மற்றவர். எங்கள் வாட்களையும் காணோமே!

க. மை. என் தடியைக்கூட காணோமே! [தேடுகிறான்.]

ந. மைந்தர்காள், வள்ளியைக் கொண்டுபோன கள்ளன் வெகு தூரம் போயிருக்கமாட்டான், சீக்கிரம் யுத்த சன்னத்தராய் வாருங்கள் தேடுவோம்! [விரைந்து போகிறான்.]

மு.மை. இது என்னடா குடுமியில் கயிறு!

[அதைப் பிடித்து இழுக்க, மறைவிலிருந்த தடி வருகிறது.]

க.மை. ஆ! இனிமேலெ பயமில்லெ! என் தடி ஆப்டுபோச்சி! எங்கெ அந்த திருடன்! எங்கெ அந்த திருடன்! — ஒரே அடியில் ஏழு!

மு.மை. அடடா! இப்படிக் கொண்டுவா, அதன் கடைசியில் என்னவோ புதிதாய் எழுதி யிருக்கிறதே! [அதைப்பார்த்து] ஈ!—ஓ! இப்பொழுது தெரிகிறது! ஒரே அடியில் ஏழு ஈ!—தம்பிமார்களே! நாம் ஒருவரும் இதைக் கண்டுபிடிக்காமற் போனோமே! [எல்லோரும் நகைக்கின்றனர்.]

நம்பிராஜன் மறுபடி வருகிறான்.

ந. என்னடா! சிரிப்பும் விளையாட்டும் இச் சமயத்தில்! வள்ளியைக் கொண்டுபோன கள்ளன் கழுகுமலைப் பக்கமாகப் போவதாகச் சேதி வந்தது. வாருங்கள் நாம் போய் மீட்டு வருவோம்!

மைந்தர்கள். இதோ வந்து விட்டோம்! [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## பத்தாம் காட்சி

இடம்—கழுகுமலைச் சாரல்—நள்ளிருள்.

உள்ளே பெரும் ஆரவாரம். சுப்பிரமணியர் வள்ளியை அழைத்துக்கொண்டு விரைந்து வருகிறார்.

சு. வள்ளி! ஒன்றும் அஞ்சவேண்டாம்! வா விரைந்து.

வ. நாதா!—நாதா!—எனக்கு பயமா யிருக்கிறது!

சு. நானருகில் இருக்கும்பொழுது, உனக் கென்ன பயம் கண்ணே?

வ. நாதா! நான் எனக்காகப் பயப்படவில்லை. இதுவரையில் என்னைத் தன் சொந்த பெண்போல் வளர்த்துவந்த நம்பி

ராஜனும், அவரது மைந்தர்களும், உம்மை இன்னுரென்று அறியாமல் எதிர்ப்பார்களாயின் அவர்கள் கதி என்ன வாகு மென்றே அஞ்சுகிறது என் மனம்!

சு. கண்ணே! வள்ளி! நீ ஒன்றும் அஞ்சாதே.

வ. நாதா! என்னைத் தாம் மணந்த இந் நாளில் அவர்களுக்கு ஒரு கெடுதியும் உண்டாகக் கூடாது, அதுதான் அடியாள் தம்மைக் கேட்டுக் கொள்வது.

சு. அப்படியே ஆகட்டும். அவர்களுக்கு நான் ஒரு தீங்கும் செய்யேன்.—அவர்கள் என் பக்தர்க ளல்லவோ?

ந. [உள்ளிருந்து] அதோ போகிருன்! அதோ போகிருன்! வாருங்கள்! வாருங்கள்! மைந்தர்காள்! பாணத்தை எய்யாதீர்கள்! நமது குழந்தை அருகிலிருக்கிருள்! அவள் மேல் படப்போகிறது! அப்படியே கெட்டியாய்ப் பிடிப் போ மவனை!

வ. நாதா! நாதா! அதோ வந்துவிட்டார்கள்! வந்துவிட்டார் கள்!

சு. வள்ளி, நீ ஒரு புறமா யிரு.

வ. அப்படியே—ஆயினும் நாதா, தாம் வாக்களித்தது ஞாபக மிருக்கட்டும்! மறவாதீர்!

சு. இல்லை கண்ணே!—ஒரு புறம் போயிரு.

[வள்ளி ஒரு புறமாகப் போகிருள்.]

நம்பிராஜனும் ஏழு மைந்தர்களும் ஓடி வருகின்றனர்.

எல்லோரும். அகப்பட்டான் கள்ளன்! அகப்பட்டான் கள்ளன்!

சு. ஆ! [வேலாயுதத்தை ஓங்க, அதன் ஒளியினுல் எல்லோரும் மயங்கி வீழ்கின்றனர்.]

வள்ளி விரைந்து வருகிருள்.

வ. நாதா! நாதா! தாம் வாக்களித்ததை மறந்தீரே! மறந்தீரே!

[பாதத்தில் வீழ்கிருள்.]

சு. [வாரி எடுத்து] வள்ளி! நான் ஒன்றும் மறக்கவில்லை.—இவர்களுக்கு ஒரு கெடுதியு மில்லை. மூர்ச்சையா யிருக்கிறார்கள், அவ்வளவுதான்! இதோ அவர்களை எழுப்புகிறேன் பார்!—நம்பிராஜனே! மைந்தர்காள்! எழுந்திருங்கள்!

எல்லோரும். [மூர்ச்சை தெளிந்து] ஆ!—ஆ!—நம்முடைய குல தெய்வம்! முருகவேள்!

ந. ஆண்டவனே! ஆண்டவனே! தாங்கள் இன்னாரென்று அறியாது தவ றிழைக்கப் பார்த்தோம். மன்னிக்கவேண்டும்! மன்னிக்கவேண்டும்!

[பாதத்தில் நமஸ்கரிக்கப் போகிறான்.]

சு. [அதைத் தடுத்து] வேண்டாம்.—நான் தங்களுக்கு மருமகனாய்விட்டபடியால் இனி தாம் அவ்வாறு செய்யலாகாது.

ந. முருகவேளே! முருகவேளே! என் பாக்கியமே பாக்கியம்! தம்மை மருமகனாய்ப் பெற்ற எனக்கு இனி என்ன குறை?—மைந்தர்காள், உங்கள் மைத்துனரை நமஸ்கரியுங்கள்.

[அவர்கள் அங்ஙனமே செய்ய சுப்பிரமணியர் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.]

க. மை. அண்ணா! எனக் கொரு சந்தேகம்—இனிமேலெ இவரே சாமி இண்ணு கூப்பிடரதா, மைச்சான் இண்ணு கூப்பிடரதா?

ந. அடே! அதனப்பிரசங்கி!

சு. அப்பா, உன் இஷ்டப்படி அழை.

ந. முருகவேளே! தாம் இவ்வளவு கஷ்ட மெடுத்துக்கொள்வானேன்? இவ்வாறு தமது திருவுள மிருப்பதை நாங்கள் அறிந்திருந்தால் நாங்களாக எவ்வளவு சந்தோஷத்துடன் வள்ளியை உமக்கு விவாகஞ் செய்து கொடுத் திருப்போம்!

சு. நம்பிராஜனே, அதற்கொரு காரண முண்டு.—அதை சீக்கிரம் அறிவீர்.—இதோ நாரதர் வருகிறார்.

நாரதர் வருகிறார்.

நா. ஹே! சுப்பிரம்மண்யா! தன்யனானேன்! தன்யனானேன்! என் வாக்கை நிறைவேற்றினாய்! நிறைவேற்றினாய்! வள்ளி சமேதனாய் உன்னை கண்ணாரக் கண்டு உளம் பூரித்தேன்! பூரித்தேன்! [ஸ்தோத்திரம் செய்கிறார்.]

சு. நாரதமுனி, வரவேண்டும்.

வ. ஸ்வாமி, நமஸ்காரம்.

நா. வள்ளி, இப்பொழுது என்ன சொல்லுகிறாய்! உன் சபதம் நிறைவேறியதா? என் சபதம் நிறைவேறியதா?

வ. ஸ்வாமி, இவ்வாறு கூறுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும்—என் சபதம்தான் நிறைவேறியது!

நா. உன் சபதம் நிறைவேறியதா?—அது எப்படி?

வ. தாங்கள்தான் கேட்டுப் பாருங்கள்.

நா. வேலனே! இது என்ன சமாசாரம்?

சு. நாரதமுனி, உங்களிருவருடைய சபதம் நிறைவேறியது.

நா. அது எப்படி? எனக்கொன்றும் விளங்கவில்லை.

சு. முனிசிரேஷ்டரே, வள்ளி என்னையே மணப்பதாகச் சபதம் செய்தனள். அப்படியே நிறைவேறியது. தாம் வள்ளியின் மனதைக் கலக்கி எப்படியாவது பலாத்காரமாய் நான் மணப்பதாகச் சபதம் செய்தீர். அங்ஙனமே நான் வேடுவனாயும் வயோதிகனாயும் வேடம் தரித்து அவள் மனதைக் கலக்கி பலாத்காரமாய் மணந்தேன். ஆகவே உம்முடைய சபதமும் நிறைவேறிற்று!

நா. ஆஹா! அப்படியா சமாசாரம்?—வள்ளி! ஏமாற்றிவிட்டாயே என்னை!

வ. ஸ்வாமி, எல்லாம் தங்களுடைய அனுக்கிரஹம்.

ந. முருகவேளே, அவர்களுடைய மனக் குறையைத் தீர்த்த வண்ணம் அடியேனுடைய மனக்குறையையும் தீர்த்தி வேண்டும்.

சு. அப்படியே ஆகட்டும், அது இன்னதெனக் கூறும்.

ந. வேறொன்று மில்லை. சகல வைபவங்களுடன் வள்ளியை மணந்து, அம் மணக்கோலக் காட்சியை நாங்கள் எல்லாம் கண்டு மகிழும்படிச் செய்யவேண்டும்.

சு. அங்ஙனமே ஆகுக!

காட்சி முடிகிறது.

# பிற்கூறு

## தோற்றக் காட்சி

கலியாணக் கோலத்துடன் வள்ளி சமேதராய், சுப்பிரமணியர் தோற்றுகிறார். ஒரு புறம் நம்பிராஜனும் அவனது மைந்தர்களும் மற்றொருபுறம் நாரதரும் நின்று நமஸ்கரிக்கின்றனர்.

நாடகம் முற்றியது.

PRINTED AT THE PEERLESS PRESS, G. T., MADRAS.